Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 — தபாற் பெட்டி என் 49

மலர் 4 — யாழ்ப்பாணம் பிலவ மாசி 9 ஆம் நாள் ரம்ழான் 14 (20-2-62) — செவ்வாய்க்கிழமை — இதழ் 10

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# புதிய மேயர் ஸ்ரீ ஜேக்கப்

## முதல் கத்தோலிக்கர் போட்டியின்றித் தெரிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண நகரின் முதலாவது கத்தோலிக்க மேயரென்ற பெருமையை கதீட்ரல் வட்டார அங்கத்தவரான திரு. ஜேக்கப் பெற்றுக்கொண்டார். நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இந்த மாநகரசபையின் விசேஷ கூட்டத்தில் அவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய வாய்ப்பு எதிர் பாராதவகையில் கைகூடியது.

கடந்த ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கனவான்கள் ஒப்பந்தத்தின் மூலம் யார் இம்முறை மேயராகத் தெரிந்தெடுக்கப்படுவார் எனக் குறிப்பிட்டிருந்ததோ அதே பிரமுகரான டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கமும் இன்னும் ஏழு பேரும் சேர்ந்து கொண்ட மற்றொரு கடைசி நேரக் கனவான்கள் ஒப்பந்தம் திரு. எம். ஜேக்கப்பை மேயராக்கிவிட்டது,

இதன் மூலம் மேற்படி மாநகர சபையைப் பொறுத்தவரை விரோதிகளாக விளங்கிய தடை செய்யப்பட்ட தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த மாநகரசபை அங்கத்தவர்களும் திரு அல்பிரட் துரையப்பா எம். பி. யின் சகாக்களான மாநகரசபை அங்கத்தவர்களும ஒன்று பட்டு உழைக்கக்கூடிய ஒரு சுமுகமான நிலையும் உருவாகியுள்ளது. திரு. ஜேக்கப் புதிய மேயராகத் தெரிவு செய்யப்படுவார் என்ற செய்தி நேற்றுக் காலை 'ஈழநாடு' இதழில் வெளிவந்திருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

திரு. டி. எஸ். துரைராசா, கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்டதும் அண்மையில் நிகழ்ந்த உதவி மேயர் தேர்தல் மூலம் சிதைக்கப்பட்டதெனக் கருதப்பட்டதுமான கனவான்கள் ஒப்பந்தத்திற்கு அமைய மேயர் பதவியை ராஜினாமாச் செய்த தன் விளைவாக இப்புதிய மேயர் தேர்தல் நேற்று பிற்பகல் நிகழ்ந்தது. ஆணையாளர் திரு. பொன் தனபால ஜெயசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த விசேஷ கூட்டத்தில் மேயர் தேர்தலுக்கான பிரகடனத்தை சபை விகிதரான திரு. மயில்வாகனம் வாசித்தார். ஹாஜி வி. எம் எம் அபுசாலியின் கோரிக்கைப்படி அது தமிழிலும் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது.

இதனையடுத்து திரு. எம். ஜேக்கப்பின் பெயரை திரு ஏ. நடராசா பிரேரித்தார். அப்பெயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கத்தினால் அனுவதிக்கப்பட்டது. கடைசி நேரக் கனவான்கள் ஒப்பந்தத்திற்கு அமைவாகக் கொண்டு வரப்பட்ட இப்பிரேரணைக்கு எதிர்ப் பிரேரணையும் உடனடியாகக் கிளம்பியது. டாக்டர் தருமலிங்கத்தின் பெயரை முன்னாள் மேயர் திரு டி. எஸ் துரைராசா பிரேரிக்க திரு பி. எம். ஜோன் அனுவதித்தார். ஆனால் தனது பெயர் பிரேரிக்கப்பட்டதை டாக்டர் தருமலிங்கம் ஆட்சேபித்த போது ஆணையாளர் குறுக்கிட்டு அபேட்சகர்களின் சம்மதம் முதலில் கோரப்பட வேண்டுமென்ற ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டுவந்தார். உடனே திரு. ஜேக்கப் தாம் அபேட்சகராக நிற்பதற்குத் தமது

(5-ம் பக்கம் பார்க்க)

## அமிர்தலிங்கம் எம். பி. மீது மற்றொரு வழக்கு

### மோட்டார் இலக்கத் தகட்டு எழுத்தை மாற்றியதாகக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செவ்வாய்

மோட்டார் கார் இலக்கத் தகட்டிலுள்ள எழுத்தை மறைத்து மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தை மீறியதாக வட்டுக்கோட்டை எம்.பி திரு. ஏ. அமிர்தலிங்கம்மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால் டன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மோட்டார் காரின் முன் இலக்கத் தகட்டிலும் பின் இலக்கத் தகட்டிலுமுள்ள எழுத்துக்களை மறைத்ததாகவும் குறித்த காரின் சாரதியாக இருந்து இலக்கத் தகட்டின் எழுத்துக்களை மறைத்ததாகவும், இதன் மூலம் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தை மீறியதாகவும் மொத்தம் நான்கு குற்றச்சாட்டுக்கள் திரு. அமிர்தலிங்கத்தின்மீது சுமத்தப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றச்சாட்டுக்கள் அவருக்கு வாசித்துக்காட்டப்பட்டது.

"நான் சுற்றவாளி" என்று திரு. அமிர்தலிங்கம் கூறினர்.

வழக்கு விசாரணையை மாஜிஸ்டிரேட் மே மாதம் 7-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'வாக்குறுதியைக் காப்பாற்ற நாம் வழிகாட்ட வேண்டும்'

### மாநகரசபைக் கூட்டத்தில் டாக்டர் தர்மலிங்கம்

### வேற்றுமைகளை மறந்து ஒத்துழைக்க புதிய மேயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"என்னையும் நண்பர்கள் மேயர் தெரிவிக்குப் பிரேரித்தனர். கனவான்கள் ஒப்பந்தம் பல பெரியார்களின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டு ஏற்படுத்தப்பட்டதாகும். கடந்த ஜனவரி 6-ம் திகதியுடன் இறந்துவிட்டதான அந்த ஒப்பந்தம் இச்சபையில் இன்று தலைகாட்டியது மிகவும் துக்கமான விஷயமாகும். நான் மேயர் தெரிவில் இன்று போட்டியிட்டிருந்தால் நிச்சயமாக வெற்றியீட்டியிருக்லாம். ஆனால் கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட எனக்குத் தெரியாது. மக்களின் பிரதிநிதிகளாகிய நாம் வழிகாட்டிகளாக இருப்பதற்குப் பதில் குருடர்களாக இருக்கக்கூடாது. சொன்ன சொல்லை காப்பாற்றவே நான் இன்று போட்டியிடவில்லை. இல்லாவிடில் நாம் சந்ததி சந்ததியாக துரோகம் செய்தவர்களாவோம்."

இவ்வாறு நேற்று மாலை புதிய மேயராக திரு. யேக்கப் தெரிவுசெய்யப்பட்டதைப் பாராட்டிப் பேசிய டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய மேயர் தெரிவு நடைபெற்றதைத் தொடர்ந்து மாநகரசபைக் கூட்டம் புதிய மேயர் திரு ஜேக்கப் தலைமையில் நேற்று நடைபெற்றது. மாநகர சபைக் கமிஷனர் திரு. டி. டி. ஜெயசிங்காவும் மேயருக்கு அருகில் அமர்ந்திருந்தார்.

### 'தலையீடு இருக்கலாகாது'

டாக்டர் தருமலிங்கம் மேலும் கூறிதாவது:-

பொதுக் கடமைகளில் அரசியல் தலையீடோ, தனிப்பட்டவர்களின் தலையீடோ இல்லாமல் செய்தாலேயே ஜனநாயகம் சரியான முறையில் இயங்கமுடியும். சர்வாதிகாரப போக்குகள் ஜனநாயகத்தை ஆபத்தில் கொண்டு போய்விட்டுவிடும். இந்த ஆபத்திலிருந்து ஜனநாயகம் பிழைக்க நாம் முறையாக நடந்து கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும்

கத்தோலிக்க சமயத்தையும் கரையோரப் பகுதியையும் சேர்ந்த ஒருவரை மேயராக தெரிவுசெய்ய வேண்டுமென்ற விருப்பத்தை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்

(5-ம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவில் உருவான புதிய ஒப்பந்தம்

### ஊழல்களை நீக்க உறுதி

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 8 அங்கத்தவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 2 மணிக்கு மாநகரசபை அங்கத்தவர் திரு. பி. எஸ். சோமசுந்தரம் இல்லத்தில்கூடி ஒரு ஐந்து அம்ச ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தத்தில் முக்கிய பிரமுகர்கள் பலர் சாட்சிகளாகக் கைச்சாத்திட்டுள்ளனர்

இக்கூட்டத்தில் திரு. கே. துரைரத்தினம் எம். பி, திரு. வி. என். நவரத்தினம் எம். பி., செனட்டர் திரு. ஜி நல்லையா, வழக்கறிஞர் திரு. சி. கதிரவேற்பிள்ளை, நியாயதுரந்தரர் திரு. எஸ். சி. மகாதேவா, திரு. ஜே. எவ். சிக்மறிங்கம், மாநகரசபை முன்னாள் உறுப்பினர் திரு ஜே. யோசப் ஆகியோர் உட்பட 8 மாநகரசபை உறுப்பினர்களும் இன்னும் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தில் மாநகரசபை அங்கத்தவர்களான திருவாளர்கள் எம். ஜேக்கப் கே. எஸ். நடராசா, என். டி செல்லத்துரை, ஜே. எஸ். அழகையா. ஏ. ஜி. இராஜகுலரியர், எஸ். ஏ. தருமலிங்கம் பி. எஸ். சோமசுந்தரம், ஹாஜி

(5-ம் பக்கம் பார்க்க)

## பஸ் கட்டணம் அதிகரிக்காது

கொழும்பு, திங்கள்

பஸ் கட்டணங்கள் உயர்த்தப்படமாட்டாது இப்பொழுதுள்ள பஸ் கட்டண விகிதமே தொடர்ந்து அமுலிலிருந்துவரு மென்று கூறும் புதிய அறிவித்தல் ஒன்றை தொழில் தேசிய சேவைகள் மந்திரி திரு எம். பி. டி. ஸட். சிறிவர்த்தன இம்மாதம் 23-ந் திகதி வெளியிடுவார்.

கொழும்பு திங்கள்

ரொக்கப் பணம் செலுத்துபவர்களுக்கு மோட்டார் கார் பதிவு காரியஸ்தர் மோட்டார் வாகனங்களுக்கு 'லைசன்ஸ்' வழங்குகிறார். 'செக்' வழங்குபவர்களுக்கு 'லைசன்ஸ்' வழங்குவதில் தாமதமேற்படும்.

# இந்திய ரயில் விபத்தில் உயிரிழந்த இலங்கையர்

## ரூ. 10 லட்சம் நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது

கொழும்பு, திங்கள்

கடந்த வருடம் அக்டோபர் மாதம் பறுஹபாத் (இந்தியா) புகையிரத விபத்தில் உயிரிழந்த அல்லது காயமடைந்த இலங்கையரின் இனத்தவர்கள், இந்திய அரசாங்க ரெயில்வேயிடம் சமார் பத்து லட்சம் ருபா நஷ்ட ஈடு கோரியுள்ளனர்.

நஷ்டஈடு கோரி 46 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. விண்ணப்ப தாரர்கள், நஷ்டஈடாக ரு 1000 லிருந்து ரு 1,00,000 வரை கோரியிருக்கிறார்கள். இம்மனுக்கள் யாவும் பரிசீலனைக்காக இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த வாரம், லக்னோ புகையிரதத்தைச் சேர்ந்த நஷ்டஈடு கமிஷனர் திரு. ஏ. எஸ். சிங்கி, யாத்திரிகர்கள் பயணத்தை ஒழுங்கு செய்த சர்வதேச உல்லாச பிரயாண ஸ்தாபனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. யசபாலசிங்கியுடன் நஷ்டஈடு கோரி விண்ணப்பித்த விண்ணப்பங்கள் குறித்து கலந்து பேசினர்.

பறுஹபாத் புகையிரத விபத்தில், பதினெட்டு இலங்கை யாத்திரிகர்கள் உயிரிழந்தனர். 28 பேர் காயமடைந்தனர்.

விண்ணப்ப தாரர்களில் 15 பேர் பௌத்த பிக்குகள். நஷ்டஈடாக இந்திய புகையிரதம் ரு 400,000 வழங்க விரும்பியுள்ளதாகத் தெரிகிறது.

## பீகாரில் தேர்தல் ஆரம்பம்

புதுடில்லி பெப். 18

பீகாரில் 88 சட்டசபை ஸ்தானங்களுக்கும், 48 லோகசபை ஸ்தாபனகளுக்கும் இன்று ஓட்டுப்பதிவு ஆரம்பமாகியது. மேற்கு வங்காளத்தில் 3-ம் நாளான இன்று தொடர்ந்து தேர்தல் நடைபெற்றன.

பீகாரில் பல இடங்களில் வானிலை சரியாக இல்லாததால் சில தொகுதிகளில் கொஞ்சம் கொஞ்சமாகவே வாக்காளர்கள் தொகுதிகளுக்கு வந்தனர். நகரங்களைவிட கிராமங்களிலேயே மக்கள் தீவிரமாக வாக்களிப்பில் கலந்துகொண்டார்கள் என அறிவிக்கப்படுகிறது.

## சாதுசங்க அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஒட்டுமடம் வீதியில் அமைந்திருக்கும் பொன்னப்பா சுவாமி சமாதி நிலயத்தில் வழக்கறிஞர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை தலைமையில், சதாநிஷ்ட பொன்னப்ப சுவாமி சமாதி பரிபாலன சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

## உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் செ தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசி மாதம் 9-ந் திகதி செவ்வாய்க்கிழமை (20-2-62) இரவு 9-13 வரை கிருஷ்ண பட்ச பிரதமை. பின் துதியை. 7-17 வரை மகம். அதன்பின் பூரம். சித்தயோகம். வர்த்தகத்திற்கு நல்ல தினம்.

**இன்று பிறந்தவர்களுக்கு**

இத்தினத்தில் ஜெனனமானவர்களுக்கு பொருள் வரவு, பணமுடக்கலில் ஆதாயம், தொழில்கள் நன்மை, தெளிவான யோசனை, சுபகருமங்கள் நடத்தல், கடன் கஷ்டங்கள் குறைதல், தாயாதிகளால் இடையிடை கஷ்டங்கள் ஏற்படல் ஆதியன காணப்படுகின்றன. தாய் வழி சொத்துச் சேர்க்கைக்கும் இடமுண்டு. வர்த்தகம், கமத்தொழில், உத்தியோகத்துறையினருக்கு மத்திமமான பலன் நடக்கும். பெண்களுக்கும் கல்வித்துறையினருக்கும் சற்று விசேஷமாக இருக்கும்.

அச்சுவினி: தொழில் நன்மை, பொருள் வரவு.

பரணி: இழந்தவர் நேசத்தால் பண விரயம்.

கார்த்திகை: பிரயாண முயற்சி, கஷ்ட நிலே.

ரோகிணி: சுப செய்தி, செல்வாக்குயர்ச்சி.

மிருகசிரிடம்: யோசனை, பெரியார் பகை.

திருவாதிரை: பிரயாண கவலை, கல்வி மேன்மை.

புனர்பூசம்: கடும் உழைப்பு, பலிதக் குறைவு.

பூசம்: பெரியோர் சேர்க்கை, தொழில் வெற்றி

ஆயிலியம்: தொழில் கேடு, அற்பர் சேர்க்கை.

மகம்: புத்தி சாதுரியம், பகை நீக்கம்.

பூரம்: பணமுடை, முயற்சிகள் தடை.

உத்தரம்: மன உறுதி, மதிப்புயர்ச்சி.

அத்தம்: மாதுருவழி உதவி, மதிப்பு.

சித்திரை: ஊழியர் கஷ்டம், செயல் தாமதம்.

சுவாதி: பண வரவு, தொழிலில் ஊக்கம்.

விசாகம்: ஞாபக மறதி, பண நட்டம்.

அனுஷம்: சுப செய்தி, பொருள் ஆதாயம்.

கேட்டை: அலைச்சல், தேக நலக்குறைவு.

மூலம்: வாக்கு வன்மை, தொழிலூக்கம்.

பூராடம்: புதியன நட்டம், அனுவசிய உழைப்பு.

உத்தராடம்: ஊழியர் நலம், நற்கரும முயற்சி.

திருவோணம்: வாக்கு வன்மை, கல்வி மேன்மை.

அவிட்டம்: தைரியக்குறைவு, சந்தேகத்தால் நட்டம்.

சதயம்: சுப செய்தி, நற்பலன்கள்.

பூரட்டாதி: உடல் நலக் குறைவு, செய்தொழில் நட்டம்.

உத்தரட்டாதி: பெரியவர் உதவி, முயற்சி பலிதம்.

ரேவதி: வீண் யோசனை, நலக் குறைவு.

## உருவப்படத் திறப்பு விழா

தெல்லிப்பளை, திங்கள்

மல்லாகம் கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் காலஞ்சென்ற திரு. ம. செல்லத்துரையின் உருவப் படம் இளைப்பாறிய உயர்தர கணக்குப் பரிசோதக அதிபரும் முன்னைநாள் வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற அங்கத்தவருமான திரு. கே. கனகரத்தினத்தால் திரைநீக்கம் செய்யப்பட்டது. பின்னர் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியும் மல்லாகவாசியுமான திரு. வீ. எம். குமாரசாமி திரு. ம. செல்லத்துரையின் அரிய சேவையையிட்டு ஒரு சொற்பொழிவாற்றினர்.

கிரிக்கெட்

## சென்ஜோன்ஸ்—301

### எவருக்கும் வெற்றியில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குமிடையே நேற்று நடைபெற்ற கிரிக்கெட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. போட்டி, சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

**சென்ஜோன்ஸ் கல்லூரி**

முதல் இன்னிங்ஸ் 301.

**இந்துக்கல்லூரி**

முதல் இன்னிங்ஸ் 225, இரண்டாவது இன்னிங்ஸ் (5 விக்கட் நஷ்டத்துக்கு) 43

நேரம் போதாததால் விளையாட்டு தொடர்ந்து நடைபெறவில்லை. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யூனியன் கல்லூரிக் கோஷ்டியினர் 3 விக்கெட் 2 ஓட்டத்தால் வெற்றிபெற்றனர்.

முதலில் யூனியன் கல்லூரிக் கோஷ்டியினர் தமது முதலாவது இன்னிங்ஸில் 280 ஓட்டங்களைப் பெற்றனர். சென். பற்றிக்ஸ் கல்லூரியினர் எல்லா விக்கெட் நஷ்டத்திற்கு 96 ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்து விளையாடிய சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் தமது 2-ம் இன்னிங்ஸில் துரிதமாக விளையாடி 180 ஓட்டங்களைப் பெற்றனர்.

யூனியன் கல்லூரிக் கோஷ்டி தனது 2-ம் இன்னிங்சை விளையாடி 7 விக்கட் நட்டத்திற்கு 48 ஓட்டங்களைப் பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஸ்கந்தவரோதயக் கோஷ்டிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 64 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 93 ஓட்டங்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 142 ரன்களும் பெற்றது. ஸ்கந்தவரோதயக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 61 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 110 ஓட்டங்களும் பெற்றது.

## 29 ஆண்டுகளுக்கு முன் மாண்ட விமானி

### சடலம் மீட்கப்பட்டது

லண்டன், பெப். 19

1933-ம் ஆண்டில் சகாரா பாலைவனத்தில் மாண்ட ஆர்.ஏ.எவ். விமானி ஒருவரின் சடலம் பிரிட்டனுக்கு நேற்று கொண்டு வரப்பட்டது.


**வாடகைக்கு**

கடையும், பலசரக்கு கடைக்குத் தேவையான முழுத் தளபாடச் சாமான்களும் வாடகைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். எம். வெள்ளைச்சாமி செட்டியார், 16|18, மின்சார நிலயம் வீதி, (ஆஸ்பத்திரிக்குப் பின்பக்கம்) யாழ்ப்பாணம்.

**உங்கள் நோய்**

களைப்படுத்த உத்தரவாதம் ... 15 நாள் மருந்து ... 16-50, தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

சூட்டைத் தணிக்கக்கூடியதும் கறள் பிடிக்காததுமான

# அலுமினியம் கூரைத் தகடுகள்



வனைத்து நெளிக்கப்பட்டுள்ள அலுமினிய கூரைத் தகடுகள் இலங்கையில் எல்லா இடங்களிலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

நீண்ட கால உபயோகிப்புக்கு உரிய அலுமினியத் தகடுகள் மலிவானவை. இலேசானவை. குறைந்த போக்கு வரத்துச் செலவுடன் எடுத்துச் செல்லக் கூடியவை. இலகுவாகப் பொருத்தக் கூடியவை.

சிக்கனமான உபயோகத்துக்கும், நீண்ட கால உழைப்புக்கும், கடைகள் தொழிற்சாலைகள் வீடுகளின் கூரைத் தேவைக்கும் அலுமினிய கூரைத் தகடுகளே சிறந்தவை.

விபரங்களுக்கு:

கூ. மொ. வி. கடினப்பொருள் இலாகா, 11, ரோஸ்மீட் பிளேஸ், கொழும்பு-10

கூ. மொ. வி. கடினப்பொருள் கடை, நர்ஷனல் ஹவுஸிங் ப்ளாட்ஸ், ஆமர் வீதி, கொழும்பு.

கூ. மொ. வி. விநியோக ஸ்டோர்ஸ், 40, மக் ..., கொழும்பு-11.

அலுமினியம் தகடுகளும் அலுமினியக் கூரைத் தகடுகளும்

கூ. மொ. வி. தாபனத்தின் சகல டிப்போக்களிலும் கிடைக்கும்.

CWE FOR QUALITY AND VALUE

# இன்று 7 ராஜ்யங்களில் தேர்தல் ஆரம்பம்

## நேரு தொகுதியில் இன்று வாக்களிப்பு

புதுடில்லி, பெப். 19

இந்தியத் தேர்தலின் 4-வது நாளான இன்று 7 ராஜ்யங்களில் தேர்தல்கள் ஆரம்பமாகின்றன. ஏற்கெனவே மேற்கு வங்காளம், தமிழ்நாடு, பிகார் ஆகிய மூன்று ராஜ்யங்களில் ஆரம்பமான தேர்தல்கள் இன்று தொடர்ந்து நடைபெறும். பிரதம மந்திரி நேரு போட்டியிடும் போல்பூர் தொகுதியில் இன்று தேர்தல் நடைபெறும்.

இன்று 500 ராஜ்யசபை ஸ்தானங்களுக்கும், 182 லோகசபை ஸ்தானங்களுக்கும் போட்டி நடைபெறவிருக்கிறது.

## பாக். ராணுவ ஆட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### லண்டனில் மாணவர்கள் நடத்தினர்

லண்டன், பெப் 19

பாகிஸ்தானில் ராணுவ சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து லண்டனிலுள்ள பாகிஸ்தான் மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். நகரமண்டபத்தில் அவர்கள் கூட்டம் நடத்தியபின் ஊர்வலமாகச் சென்றனர். கிழக்கு மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தில் பல பிரிட்டிஷ் தொழிற்கட்சி அங்கத்தினர்களும் கலந்துகொண்டனர்.

பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்டிருக்கும் அரசியல் தலைவர்களை விடுவிக்குமாறு ஆர்ப்பாட்ட மாணவர்கள் கோரினர். லண்டன்சர்வகலாசாலை, லண்டன் பொருளாதாரக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

## பிரிட்டிஷ் கயானா

ஜார்ஜ்டவுன், பெப் 19

பிரிட்டிஷ் கயானாவில் இப்போது நிலைமை அபிவிருத்தியடைந்திருப்பதாய்க் கூறப்படுகிறது. பிரதமர் டாக்டர் செட்டிஜகன்; மற்றும் இரு அரசியல்கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து அமைதியைக் காக்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இக்கலவரத்தின் காரணமாக பிரிட்டிஷ் கயானாவின் சுதந்திரம் பாதிக்கப்படாது என கயானா கவர்னர் கூறியிருக்கிறார்.

## தபால் திருட்டுகளை கண்டுபிடிக்க உதவுபவர்கள்

### பரிசு வழங்க முடிவு

கொழும்பு, திங்கள்

தபால் திருட்டுகளை கண்டுபிடித்து தகவல் கொடுக்கும் தபால் அதிகாரிகளுக்கு பரிசுகள் வழங்கப்படும் எனத் தெரிகிறது. தபாலில் அனுப்பப்படும் மணிஓடர்கள், காசோலைகள் களவாடப்படுவதை தடுப்பதற்கு இந்தப் புதிய நடவடிக்கை எடுக்கப்படலாம். இது சம்பந்தமாக தபால் அதிகாரிகளுக்கிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகிறது.

## தமிழ் ஊழியருக்கு சிங்கள வகுப்பு

கொழும்பு, திங்கள்

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கான முதலாவது சிங்கள பரீட்சை, கடந்த சனிக்கிழமை நாடுபூராவுமுள்ள சுமார் 125 நிலையங்களில் நடைபெற்றது. 'கிறேட் 1' தகுதிப் பரீட்சை என்றழைக்கப்படும் இந்தப்பரீட்சை, மூன்றும் வகுப்பு சிங்களம் தராதரமுள்ளது.

இந்தப் பரீட்சைக்காக தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு வருட அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட பரீட்சைக்கு சுமார் 4,000 க்கும் அதிகமான தமிழ் அரசாங்க ஊழியர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

## கட்டுப்பாட்டு விலைக்கு விற்கும் வியாபாரிகள்

### கள்ளத் தராசுகளை உபயோகிக்கிறார்களாம்

கொழும்பு, திங்கள்

கள்ளத் தராசுகளைப் பாவிக்கும் வியாபாரிகளைக் கண்டு பிடிப்பதில் வர்த்தக, உணவு அமைச்சு தீவிர நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிகிறது. கள்ளத் தராசுகள் பாவிக்கும் வியாபாரிகளின் தொகை அதிகரித்துக்கொண்டு வருவதாக வர்த்தக, உணவு அமைச்சுக்கும், கொழும்பு மாநகர சபைக்கும் பலர் முறையிட்டுள்ளனர்.

நகர வர்த்தகர்கள், உணவுப் பொருட்களை இப்பொழுது கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்கிறார்கள். ஆனால் அவர்கள் கள்ளத்தனமான தராசுகளை உபயோகித்து வேறு வழியில் லாபம் எடுக்கிறார்கள்.

இறைச்சி, மீன், மற்றும் உணவுப் பொருட்களை இப்பொழுது கள்ளத் தராசுகளில் நிறுத்து வர்த்தகர்கள் விற்பனை செய்கிறார்கள். ஒரு றாத்தல் இறைச்சியை வாங்கினால் அதில் முக்கால் றாத்தல் இறைச்சிதான் இருக்கும்!

## "தமிழில் வர்த்தக ஆசிரியர் பயிற்சி வகுப்பை நடத்துக"

### கல்வி மந்திரிக்கு சாவகச்சேரி எம். பி. மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் கல்வி மந்திரிக்கும், வித்தியாதிபதிக்கும் அனுப்பியுள்ள மகஜரில் கூறியிருப்பதாவது:-

"யாழ்ப்பாணம் தொழில்நுட்பப் பாடசாலையில் அல்லது பலாலி அரசினர் கலாசாலையில் விசேஷ வர்த்தக ஆசிரியர் பயிற்சிவகுப்பைத் தமிழில் நடத்துமாறு யாழ்ப்பாணத்திலுள்ள அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் கடந்த 4-7-61 முதல் வற்புறுத்திவந்திருக்கிறது. ஆயினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் இதுசம்பந்தமாக எடுக்கப்படவில்லை. விசேஷ வர்த்தக ஆசிரியர் பயிற்சி வகுப்பு 1957-ம் ஆண்டு முதல் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் சிங்களத்தில் நடைபெற்றுவருகிறது. தமிழில் அல்லது ஆங்கிலத்தில் வகுப்புக்கள் நடைபெறவில்லை. ஆனால் எங்களைத் தடுப்புக்காவலில் வைத்திருக்கும்போது "இதுதான் உண்மை" என்ற பிரசுரத்தில் சிங்கள மாணவர்களுக்கு இருக்கும் அதே உரிமை தமிழ் மாணவர்களுக்கும் உண்டு என்றும், பட்டதாரிவகுப்புவரையில் தமிழ் மொழியில் கற்க வசதி உண்டு என்றும் தகவல் பகுதியினர் கூறியுள்ளனர். இது உண்மையானல் விசேஷ வர்த்தக ஆசிரியர் பயிற்சி வகுப்பை இவ்வாண்டு தமிழ் மொழியில் நடத்த உடனடியாக ஒழுங்குகள் செய்யவேண்டும்."

தொழில்நுட்பக் கல்விக் கமிஷனுக்கும், தேசியக் கல்விக் கமிஷனுக்கும் இந்த மகஜரின் நகல்கள் அனுப்பிவைக்கப்பட்டதுடன், கல்விமந்திரிக்கு இவ்விஷயமாகச் சிபார்சு செய்யுமாறும் இரு கமிஷன்களிடமும் கேட்கப்பட்டுள்ளது.

## அல்ஜீரிய சம்பாஷணை தொடருகிறது

லூசேர்ன், பெப் 19

அல்ஜீரியா சம்பந்தமாக பிரான்சுக்கும், தேசிய வாதிகளுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது. அல்ஜீரியா சுயநிர்ணயம் பெறும்போது அங்கு ஜனவாக்களிப்பு நடப்பதை மேற்பார்வையிடும் பொருட்டு ஒரு தற்காலிக நிர்வாகத்தை அமைக்க இருசாராரும் உடன்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. பிரான்சும் அல்ஜீரியாவும் அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஒத்துழைப்பதெனவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. அச்சமயத்தில் கலகம் எதுவும் ஏற்படாமலிருக்கும்பொருட்டு ஒரு லட்சம் பிரெஞ்சுத் துருப்புக்கள் அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## பிரெஞ்சு போர்விமானங்கள் அக்கிரமம்

### மொரோக்கோவில் குண்டுகள் பொழிந்தனவாம்

அல்ஜியர்ஸ், பெப் 19

அல்ஜீரியாவில் ஒரானிலிருந்து கிளம்பிய இரு பிரெஞ்சு போர்விமானங்கள் மொரோக்கோவில் குண்டுகளை வீசியதாயும், பின் அவை அல்ஜீரியா திரும்பியவுடன் விமானிகள் தப்பிவிட்டனரென்றும் அறிவிக்கப்பட்டது.

## உலகிலேயே மிகப்பெரிய வாத்துப் பண்ணை!

### எல்லாகாரியத்துக்கும் தானே இயங்கும்சாதனம்

ஓல்டன் பர்க்(டாட்)பெப். 19

கீழ் ஸாக்ஸனியிலுள்ள ஓல்டன் பர்க்கில் உலகிலேயே மிகப் பெரியதெனக் கருதப்படும் வாத்துப் பண்ணை இருக்கிறது. ரால்ப்போல்ட்ஸ் என்பவர் இதன் சொந்தக்காரர். சகல விதமான காரியங்களுக்கும் தானே இயங்கக் கூடிய சாதனங்களை அமைத்து பார்ப்பவர் பிரமிக்கும் வகையில் இம்"மாதிரிப்" பண்ணையை இவர் நடத்தி வருகிறார். உக்ரேனியாவின் விவசாய மந்திரி இப்பண்ணைக்கு விஜயம் செய்து தன் பாராட்டுதல்களைத் தெரிவித்திருக்கிறார்.

ஒவ்வொரு வருஷமும் இப்பண்ணையிலிருந்து லட்சக்கணக்கான வாத்துக்குஞ்சுகள் நன்ருக வளர்க்கப்பட்டு விற்கப்படுகின்றன. சென்ற வருஷத்தில் மட்டும் ஒரு கோடி ஜெர்மன் மார்குகள் மதிப்பிற்கு வாத்துக்குஞ்சுகள் விற்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் உதவி எதுவும் இல்லாமலே இந்த வாத்து உற்பத்தி "தொழிற்சாலை" பிரமாதமான முறையில் நடைபெற்று வருகிறது.

8 வாரங்கள் குஞ்சுகள் நன்ருகப் போஷிக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. பின்னர் ஒரு நாளைக்கு 6000 வாத்துக் குஞ்சுகள் பதம் செய்யப்பட்டு உணவுப் பொருள்களாக டப்பாக்களில் அடைக்கப்படுகின்றன. போல்ட்ஸை ஜெர்மனியின் "வாத்து மகாராஜா" என்றே பலர் அழைக்கின்றனர். இந்த டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள் மேற்கு ஜெர்மனின் எல்லா இடங்களுக்கு மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும் அனுப்பப்படுகிறது.

## இதுவரை 107 பேர் மாண்டனர்

ஹாம்பர்க், பெப் 19

வடமேற்கு ஜெர்மனியில் ஏற்பட்ட வெள்ளம், சூறாவளி ஆகியவற்றின் காரணமாய் இதுவரை 107 பேர் மாண்டிருப்பதாகவும், 240 பேர் காயமடைந்திருப்பதாகம் அறிவிக்கப்படுகிறது. 40 ஆயிரம் பேர் வீடிழந்தனர் என்றும், 150 கோடி மார்க் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்றும், 25,000 துருப்புக்கள் மீட்புவேலையில் ஈடுபட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

## கிராம அபிவிருத்திசபை நிர்வாகிகள் கூட்டம்

கிளிநொச்சி, ஞாயிறு

இராமநாதபுரம் குடியேற்ற வாசிகளது கிராம அபிவிருத்திச்சபையின் நிருவாகிகள் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

குடியேற்றவாசிகளின் சேமநலத்துக்கான பல விஷயங்கள் ஆலோசிக்கப்பட்ட பின் வருடாவருடம் கிடுகு வேய்ச்சலால் ஏற்படும் செலவினத்தை குறைப்பதற்காக அரசாங்கம் கொடுக்கும் ஓடுகளை இவ்விடம் கூடியவிரைவில் கொண்டுவந்து சேர்ப்பதற்கு அரசாங்கத்தை நம்பி இருப்பது காலதாமதமேற்படுமாதலால் கூடிய விரைவில் வீடுகள் ஓடுகளால் வேயப்படவேண்டுமா

யின் ஓடு ஏற்றுக்கூலிக்கு ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் அரசாங்கம் கொடுக்கும் பணத்தொகையுடன் மேலதிகமாக ஒவ்வொருவரும் ரூபாய் இருபது கொடுத்தால் கூடிய விரைவில் ஓடுகளை ஏற்றிவந்து கொடுக்கமுடியும் என்ற இராமநாதபுரம் வட்டக்கச்சிக் கொலனிகளின் அதிபர் திரு. எச். கிருஷ்ணபிள்ளையின் ஆலோசனையைச் சபை ஏகமனதாய் ஏற்றுக்கொண்டது.

## இ. போ. சபைக்கு முழுநேர டைரக்டர்கள்

கொழும்பு, திங்கள்

இ. போ. சபைக்கு முழுநேர டைரக்டர்கள் நியமனம் குறித்து இலங்கைப் போக்குவரத்து சபை விரைவில் அரசாங்கத்துக்கு சிபார்சு செய்யும். அதிக வேலைகளைக் கவனிப்பதற்காக சில முழு நேர டைரக்டர்களை நியமிப்பது குறித்து அண்மையில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

சபைக் கூட்டத்தில் அங்கத்தவரொருவர் பேசுகையில், லண்டன் போக்குவரத்து சபையில் தலைவர், உப தலைவர் உட்பட ஐந்து முழு நேர டைரக்டர்கள் இருக்கிறார்கள் என்றும் மொத்தம் எட்டு அங்கத்தவர்கள் உண்டென்றும் கூறினார்.

## ஈரானுக்கு தேயிலை ஏற்றுமதி மீண்டும் ஆரம்பமாகும்

### நிரந்தரக் காரியதரிசி கொழும்பு திரும்பினர்

கொழும்பு, திங்கள்

ஈரான் அரசாங்கத்துடன் வர்த்தக ஒப்பந்தம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியபின் உணவு, வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை கொழும்பு திரும்பினர். அடுத்த சில தினங்களில் டெஹ்ரானில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும். இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அங்குள்ள இலங்கைத் தூதர் திரு. அன்டன் முத்துக்குமாரு, ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார். ரூ. 4 கோடி மதிப்புள்ள இலங்கைத் தேயிலையை மீண்டும் ஈரானுக்கு அனுப்ப இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது. கடந்த ஏப்ரல் மாதம் இலங்கைத் தேயிலையை வாங்குவதை ஈரான் நிறுத்திவிட்டது நினைவிருக்கலாம். பெருந்தொகையான கருவாடு, இதர பொருட்கள் ஆகியவற்றை ஈரானிலிருந்து இலங்கை இறக்குமதி செய்யும்

மணி வாக்கு

எல்லாச் செல்வங்களும் இறைவனுக்கே உரியன. நாமும் அவனுடைய சொத்து என நினையுங்கள்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மாசி மீ 9 உ (20-2-62)


## இருபெரும் உண்மைகள்

கொழும்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பல்கலைக் கழக மகளிர் கருத்தரங்கத்தில் மகா தேசாதிபதி சர் ஒலிவர் குணத்திலகா இருமுக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார். பொது வாழ்வில் பட்டதாரிப் பெண்மணிகள் எவ்வித பணிகளை ஆற்றலாம் என்பது ஒன்று. மற்றையது, இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பல்லாண்டு காலமாக இருந்து வரும் நெருங்கிய தொடர்பு. பட்டதாரிப் பெண்கள் நாட்டின் முன்னேற்றதுக்கு முதுகெலும்பு போன்றவர்கள் என்பதைச் சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். படித்த பெண்கள் கிராமங்களில் வாழும் பெண்களின் முன்னேற்றத்துக்காக உழைக்கவேண்டுமென அவர் யோசனை கூறியிருக்கின்றார். இலங்கையின் ஜனத்தொகையில் சரிபாதியினர் பெண்களாக இருப்பதால் அவர்களின் ஒத்துழைப்பு நாட்டின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமென அவர் க[illegible]கின்றார். கிராமந்தான் இந்தியாவின் இதயம் எனவும் அதுவே நாட்டின் உயிர்நாடியென்வும் காந்திஜி பல சந்தர்ப்பங்களிற் கூறியிருக்கின்றார். கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயருமாயின் அது நாட்டின் உயர்ச்சியாக இருக்குமென்பதை எவரும் ஒப்புவர். மகா தேசாதிபதி சர் ஒலிவர் குணத்திலகாவும் இதனை உளத்திற் கொண்டே கிராமப் பெண்களின் முன்னேற்றத்தில் பட்டதாரிப் பெண்கள் அக்கறையெடுக்க வேண்டுமெனக் கேட்டிருக்கின்றார். நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள மாதர் சங்கங்கள் இத்துறையில் ஆர்வத்துடன் உழைத்தால் கிராமப் பெண்கள் வாழ்வை ஒளிபெறச் செய்யலாம். இதற்கு அரசாங்கத்தின் ஆதரவையும் பெறுவது சாத்தியமாகும். எனவே படித்த பெண்மணிகள் இத்துறையிற் கவனம் செலுத்துவார்களென நம்புகின்றோம்.

அடுத்த விஷயம் இலங்கை–இந்தியத் தொடர்பையும் ஒத்துழைப்பையும் பற்றியது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள தொடர்பு மகா தேசாதிபதி கூறியிருப்பதுபோல் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இருநாடுகளும் பன்னெடுங்காலமாக சமயத் துறையிலும் கலாசாரத் துறையிலும் தொடர்பு கொண்டுள்ளதென்பதை. வரலாறு கூறும் இந்நாடுகள் ஏககாலத்திலேயே சுதந்திரத்தையும் பெற்றன. சுதந்திரம் கிடைத்த பின்னர் பிரஜாவுரிமைப் பிரச்சினை போன்ற பல சிக்கல்கள் ஏற்பட்டாலும் இருநாடுகளுக்குமிடையேயுள்ள பொதுவான கொள்கைகள் பாதிக்கப்படவில்லை. இவை மேலும் பலமடைந்துவருகின்றனவென்று கூறினும் அது மிகையாகாது.

இலங்கையும் இந்தியாவும் ஜனநாயக ஆட்சி முறையையே தங்கள் கொள்கையாகக் கொண்டிருப்பதுடன் வல்லரசுக் கோஷ்டிகளுடன் சேராது நடுநிலைமை வகித்துவருகின்றன. எனவே இருநாடுகளும் மேலும் ஒன்றையொன்று நன்கு அறிந்துகொள்வதால் நல்ல விளைவுகளே உண்டாகும்.

இலங்கைக்கு ஏற்பட்டுள்ள மிகக் கஷ்டமான பிரச்சனைகளை எல்லாம் தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவி இலங்கைக்கு வேண்டுமென மகா தேசாதிபதி திறந்த உள்ளத்துடன் பேசியிருக்கிறார். இந்தியா–இலங்கைக்கு உதவ ஒருபோதும் பின்னிற்கமாட்டாது. அவர் கருதுவதுபோலவே இந்தியாவின் நட்புறவை இலங்கை இழக்குமாயின் 2200 ஆண்டின் சரித்திரத்தையே இலங்கை இழந்துவிடுமெனலாம்.

இந்திய பொதுத் தேர்தல்: 3

### தமிழ் நாட்டிலே தேர்தல் ஆரம்பம்

# 11 மக்கள்சபைத்தொகுதிகளுக்கும் 54 சட்டசபைத்தொகுதிகளுக்கும் முதல் நாள் தேர்தல்

—நமது விசேஷ நிருபர்—

சென்னை, பெப். 15

இக்கட்டுரை பிரசுரிக்கப்படும் சமயத்தில் தமிழ் நாட்டிலே கால்வாசித்தொகுதிகளில் பொதுத்தேர்தல் ஆரம்பித்துவிடும். 11 மக்கள் சபைத் தொகுதிகளிலும் 54 சட்டசபைத் தொகுதிகளிலும் தேர்தல்கள் பிப்ரவரி 17-ம் தேதி நடைபெறுகின்றன. பின்னர் 19, 21, 24-ம் தேதிகளில் மற்றைய தொகுதிகளில் நடைபெறும். வேலூர், திருவண்ணாமலை, திருச்செங்கோடு, கோபிசெட்டிபாளையம், பொள்ளாச்சி, திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை, மாயூரம், தஞ்சாவூர், அருப்புக்கோட்டை ஆகிய மக்கள்சபைத் தொகுதிகளிலும் இவற்றோடு சம்பந்தப்பட்ட 54 சட்டசபைத்தொகுதிகளிலுமுள்ள 50 லக்ஷம் வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்வார்கள்.

பொள்ளாச்சி தொகுதியில் போட்டியிடும் மந்திரி சுப்ரமணியத்துக்கு வெற்றிகிடைக்குமாயினும் சுதந்திராக்கட்சியின் போட்டியும் எதிர்ப்பும பலமாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

கோயமுத்தூர், பொள்ளாச்சி தொகுதிகள் மில் முதலாளிகளின் இருப்பிடம். அதேபோல் தொழிலாளர்களும் அதிகம். 1957-ல் பொள்ளாச்சியின் மக்கள் சபைப் பிரதிநிதியாக வெற்றிபெற்றவர் காங்கிரஸ் கட்சி மில் முதலாளி பி. ஆர். ராமகிருஷ்ணன் இவர் இப்போது கோயமுத்தூரில் கம்யூனிஸ்ட் அபேட்சகர் (தற்போதய அங்கத்தவர்) ஸ்ரீமதி பார்வதி கிருஷ்ணனை எதிர்த்துநிற்கிறார். பார்வதி டாக்டர் சுப்பராயன் (ரயில்வே மந்திரி) புதல்வி.

பொள்ளாச்சியில் சட்டசபைப் பிரதிநிதியாக இருந்தவர் காங்கிரஸ கட்சியைச் சேர்ந்த பஸ் முதலாளி என். மகாலிங்கம். பழையதேர்தலில் பெருவாரியான வாக்குகளால் வெற்றிபெற்ற இவருக்கு இப்போது தி. மு. க. அபேட்சகர் ரங்கசாமிகவுண்டரின் எதிர்ப்பு பலமாயிருக்கிறது. ஊத்துக்குளி ஜமீந்தார் இதற்கு ஆதரவளிக்கிறார்.

பொதுவாக காங்கிரஸுக்கு இந்தத் தொகுதிகளில் அரைவாசி ஸ்தானங்கள் கிடைக்கலாம் என்றும், ஆனால் கடும் எதிர்ப்பு இருக்கிறது என்றும் பேசிக் கொள்ளப்படுகிறது. தி. மு. க. வும் சுதந்திராவும் கடுமையாக எதிர்க்கின்றன. தி மு க. இரண்டு மூன்று ஸ்தானங்களைக் கைபபற்றக் கூடுமாம்.

கோபி செட்டிபாளையத்தில் மக்கள் சபைக்கு முந்திய பிரதிநிதி காங்கிரசிலிருந்த ராமசாமி கவுண்டர். இவர் இப்போது காங்கிரஸிலிருந்து விலகி சுயேச்சையாளராகப் போட்டியிடுகிறார். சட்டசபையில் காங்கிரஸ பிரதிநிதியாயிருந்த கருத்திருமன் இதில் போட்டியிடுகிறார். அநேகமாக ராமசாமி கவுண்டருக்குத் தான் இடம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள்.

பல்லடம் தொகுதியில் தமிழ்நாடு பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் பி. எஸ். சின்னத்துரை எம். எல். ஏ. சட்டசபைக்கு மறுபடியும் போட்டியிடுகிறார். 1958-ல் இலங்கையில் நடந்த சம்பவங்களின்போது பரபரப்பை உண்டுபண்ணியவர் இவர் என்பதை இலங்கைத் தமிழர்கள் மறக்க மாட்டார்கள். இவருக்கு இப்போது காங்கிரஸ் பலமான எதிர்ப்பைக் கொடுத்து வருகிறது. மில் தொழிலாளி செங்காலியப்பன் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கிறார். இவர் கோயம்புத்தூர் மில்தொழிளாளர் சங்கத் தலைவர். 24-ம்தேதி இங்கு தேர்தல் நடைபெறுகிறது.

கோயமுத்தூர் தொகுதிகளில் காங்கிரசுக்கும் சுதந்திராக்கட்சிக்கும் பலதத போட்டியிருக்கும் என்று பேசிக் கொள்ளப்படுகிறது. முடிவு என்னவாகும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் தி. மு. க. வும் சுயேச்சையாளர்களும் ஒவ்வொரு பக்கத்தில் வாக்காளரிலே பிளவை ஏற்படுத்தினால் காங்கிரஸ ஈற்றில் வெற்றிபெற்றுவிடலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பழைய புலி முத்துராமலிங்கத்தேவர் காங்கிரசுக்கு எதிராகஅருப்புக்கோட்டைத் தொகுதிக்கு மக்கள் சபைஅபேட்சகராக நிற்கிறார். இவருக்கு வெற்றி நிச்சயம் என்பதில் பலர் சந்தேகப்படவில்லை மற்றைய சட்டசபைத் தொகுதிகளிலும் தேவர் சென்று காங்கிரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்துவருகிறார். இதனால் ஏற்கெனவே நாடார்களுக்கும் தேவர்களுக்கு மிருந்த பிளவு அதிகரித்து வருகிறதாகவும், ஜாதி அபிமானம் காரணமாக சில தொகுதிகளில் காங்கிரஸ் பல வாக்குகளை இழக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

சாத்தூர் தொகுதியில் தமிழ்நாட்டு முதல்மந்திரி காமராஜருக்கு எதிராக இரண்டுபேர் போட்டியிடுகின்றனர். ஒருவர் சுயேச்சை ராமசாமிரெட்டியார் மற்றவர் சுதந்திரா பி. ராமமூர்த்தி. தி. மு. க. வைச் சேர்ந்த தலைவர்களும் தொண்டர்களும் சுதந்திராக்கட்சிக்கு நேரடியாகவே வாக்குச்சேகரித்து வருகிறார்கள். முத்துராமலிங்கத்தேவரும் காமராஜருக்கு எதிராக வாக்களிக்குமாறு தேவர்களையும் நாயக்கர்களையும் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறார். சென்ற பொதுத்தேர்தலில் காமராஜருக்கு 36000வாக்குகள் கிடைத்தன. போட்டியாக நின்ற ஜயராமரெட்டியாருக்கு 31,000 கிடைத்தன. அதிகப்படி வாக்குகள் அவ்வளவு பிரமாதமாயில்லை. ஆனால் இந்த முறை இருவர் எதிர்த்து நிற்பதால் காமராஜருக்கு அதிக மெஜாரிட்டி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதுகுளத்தூரில் பழையபடி சசிவர்ணத் தேவர் போட்டியிடுகிறார். இவருக்கு எதிராக காங்கிரஸ் அபேட்சகர் காசிநாததுரை நிற்கிறார். முத்துராமலிங்கத் தேவருடைய கட்சியாகிய முன்னணிக் கட்சியைச் சேர்ந்த சசிவர்ணத் தேவருக்கு முதுகுளத்தூரில் செல்வாக்கு அதிகம். இங்கு வீரம்மாள் தேவாலயக் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறைவாசம் செய்த பல தேவர்களை அரசாங்கம் "பரோ"லில் தற்காலிகமாக விடுவித்திருப்பதால் இவர்கள் காங்கிரசுக்கு சாதகமாக வாக்குகள் சேகரிப்பதாகச் சொல்லப்படுகிறது.

ராமநாதபுரம் ராஜா சண்முகராஜேஸ்வர சேதுபதி ராமநாதபுரம் சட்டசபைத் தொகுதியில் அபேட்சகராக நிற்கிறார். நான்குபேர் இவரை எதிர்த்து நின்றபோதிலும் இவர் வெற்றிபெறலாமென்று கருதப்படுகிறது.

காரைக்குடியில் சா. கணேசன் (சுதந்திராக்கட்சியின் தமிழ்நாட்டுக் கிளைத்தலைவர்) நிச்சயம் வெற்றிபெறுவார் என்பதில் எவரும்சந்தேகம்கொள்ளவில்லை. மொத்தத்தில் ராமநாதபுரம் சட்டசபைத் தொகுதிகள் 14ல் எதிர்க்கட்சி 5 ஸ்தானங்களுக்குமேல்கைப்பற்றலாம் என்று தெரிகிறது. காங்கிரசுக்கு 7க்குக் குறைவில்லாமல் கிடைக்கலாம்.

மதுரை மாவட்டத்திலும் ராமநாதபுரத்தைப்போல் ஜாதிப்பற்றுத்தான் இந்தப் பொதுத்தேர்தலில் மேலோங்கி நிற்கும் என்று தெரிகிறது. மதுரை நகரத்தில் மூன்று பலசாலிகள் மக்கள் சபைக்குப் போட்டியிடுகின்றனர். கடந்த தேர்தலில் வெற்றிபெற்ற பிரதிநிதி கம்யூனிஸ்ட்கட்சி கே. டி. கே. தங்கமணி மறுபடியும் போட்டியிடுகிறார். இவர் 'தினத்தந்தி' எஸ். பி. ஆதித்தன் ("நாம் தமிழர்") அவர்களுடைய சகலன். மக்கள்சபையில் அளவற்ற செல்வாக்குள்ள எதிர்க்கட்சித் தலைவர். இவரை எதிர்த்து நிற்க காங்கிரஸ் இம்முறை பழைய தியாகி என். எம். ஆர். சுப்பராமனை நிறுத்தியிருக்கிறது. சுப்பராமன் அரசியலை விட்டு நெடுநாள் துறந்திருந்து அமைதியாக சமூகசேவை செய்து வந்தவர். சுதந்திராக்கட்சி தமது செயலாளர் எஸ். எஸ். மாரிசாமியை இங்குகொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. கடந்த அ. இ. காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் மதுரையில் நடந்த பின்னர் இப்போது அநேகமாக காங்கிரஸ் இந்தத்தொகுதியைக் கைப்பற்றிவிடலாம் என்றே நம்பப்படுகிறது. ஆயினும் காங்கிரஸை எதிர்க்கும் தேவர்கள் வாக்கு சுதந்திராவுக்குப் போய்விட்டால் நிலைமை எப்படியாகுமோ சொல்ல முடியாது.

சட்டசபைத் தொகுதிகளில் மதுரை மாவட்டத்தில் பெரும்பான்மையானவை காங்கிரசுக்குக் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் சுதந்திராக்கட்சி பலமான எதிர்ப்புக்கொடுத்துவருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்திலும் சுதந்திராவின் செல்வாக்கு பல தொகுதிகளில் வளர்ந்திருக்கிறது என்று பேசப்படுகிறது. திருநெல்வேலி மக்கள்சபைத் தொகுதிக்கு சுதந்திரா சார்பாக பேராசிரியர் எம். ரத்னசுவாமி போட்டியிடுகிறார். சிறந்த அறிஞராகிய இவருக்கு எதிராக காங்கிரஸ்கட்சி அபேட்சகர் வெற்றிகரமாகப். போட்டியிட முடியாது என்று சொல்லப்படுகிறது. இவரும் திருநெல்வேலியில் எம். டி. திரவியம் ஹிந்துக்கல்லூரியில் விரிவுரையாளராக இருந்து இளைப்பாறிய ஆசிரியர். இவர் பெயர் முத்தையாபிள்ளை.

'தினத்தந்தி' எஸ். பி. ஆதித்தன் ('நாம் தமிழர்') திருச்செந்தூர் தொகுதியில் சட்டசபைக்கு அபேட்சகராக நிற்கிறார். 'தினச்செய்தி' ஆசிரியர் கோசல்ராம் (காங்கிரஸ்) சாத்தான்குளத் தொகுதியில் நிற்கிறார். இவர் இனத்தைச் சேர்ந்த நாடார் பெரும் தொகையாயுள்ள இத்தொகுதியில் கோசல்ராம் வெற்றி பெறக்கூடும்.

புதுக்கோட்டையில் மக்கள் சபை அபேட்சகராக அழகசுந்தரம் செட்டியார் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டுள்ளார். இவருக்கு வெற்றி நிச்சயம் என்று தெரிகிறது. இவர் நாட்டுக்கோட்டை நகரத்தாரில் ஒருவர். முன்பு கொழும்பிலே ஆனந்தா கல்லூரியில் படித்து 'புரொக்டர்' உத்தியோகம் பார்த்த இவர் இப்போது பாங்கு டைரக்டராயிருக்கிறார். மதுரையில் நடந்த காங்கிரஸ் கமிட்டி விழாவில் இவர்தான் பொருளாளராயிருந்தவர்.

திண்டுக்கல் மக்கள்சபைத் தொகுதிக்கு காங்கிரஸ் அபேட்சகராக நிற்கும் ஸ்ரீமதிசௌந்தரம் ராமச்சந்திரனுக்கும் (டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் சுந்தரம் ஐயங்கார் புதல்வி) வெற்றி நிச்சயம். ஆனால் எதிர்ப்பு அதிகம்,

தஞ்சாவூரில் சட்ட சபை அபேட்சகரான தி. மு. க. அங்கத்தவர் கருணாநிதிக்கும் காங்கிரஸ் அபேடசகர் பரிசுத்த நாடாருக்கும் போட்டி அதிகமானாலும் பரிசுத்த நாடாருக்கு இருக்கும் செல்வாக்கில் அவர் குறைந்தது 10,000 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெறுவார் என்று நம்பப்படுகிறது. தஞ்சாவூரைச்சேர்ந்த மற்றைய சட்டசபைத் தொகுதிகளில் காங்கிரஸ் பெரும்பான்மை பெறும் என்று பேசப்படுகிறது. கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் பிரதேசத்தில்தான் அதிக அபேட்சகர்களை நிறுத்தியிருந்தும் ஒரு ஸ்தானத்துக்குமேல பெறுவது அசாத்தியம். தி. மு. க. வைப் பொறுதத அளவில் எதுவும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை சுதந்திராக் கட்சிக்கு இரண்டொரு வெற்றி கிட்டலாம்.

## இந்தியாவுக்குஜெர்மன் மூக்குக்கண்ணாடிகள்

ஆஸ்னாப் ருயெக் (டார்ட்), பெப். 19

இந்தியா, பாகிஸ்தான் மக்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் கொடுத்து உதவுவதற்காக "ஐயன்கிளட்" ஸ்தாபனத்தினர் கீழ் ஸாக்ஸனியைச்சேர்ந்த நகரங்களில் பொதுமக்களிடமிருந்து மூக்குக் கண்ணாடிகள், பிரேம்கள், லென்சுகள் முதலியவைகளைச் சேகரித்து வருகின்றனர்.

உலகநன்மைக்காகவும் உலக மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடனும் இந்தஸ்தாபனம் இயங்கி வருகிறது. இதில் பிரபலஸ்தர்கள் பலர் அங்கம் வகிக்கின்றனர். முன்னாள் மேற்கு ஜெர்மன் ஜனாதிபதி ஹெறஸ்ஸும், முன்னாள் யூ. எஸ். ஜனாதிபதி ஐஸன்ஹோவரும் இந்த ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

ஹனோவரில் இந்த மூக்கு கண்ணாடி சேகரிப்பு இயக்கம் துவககப்பட்டது. இதற்கு பேராதரவு எங்கும் கிடைத்து வருகிறது. வெகு சீக்கிரத்தில் 15, 000க்கு மேற்பட்ட மூக்குக் கண்ணாடிகள், பிரேம்கள், லென்ஸ்கள் ஆகியவை சேகரமாகி விட்டன. இவைகளில் பல இந்தியா பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டுவினியோகிக்கப்பட்டும் வருகிறது. இந்த பேராதரவு இந்தஸ்தாபனத்தினரை பெரிதும் உற்சாகப்படுத்தி மேலும் பல ஜெர்மன் நகரங்களில் இந்த சேகரிப்பு வேலையில் ஈடுபடச் செய்துள்ளது. ஆஸ்னாப்ருயெக்கில் இம் முயற்சியில் மகத்தான வெற்றி ஏற்பட்டுள்ளது.

# நேற்றுடன் 570 லட்சம் பேர் வாக்களித்தனர்

## இந்தியத் தேர்தலில் 25 சத வாக்களிப்பு பூர்த்தி

புதுடில்லி, பெப். 19

இந்தியத் தேர்தல்களில் இன்று வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை 370 லட்சமாகும். நேற்று வரை 160 லட்சம் பேர் வாக்களித்தனர். இன்று தேர்தல் முடிந்தவுடன் வாக்றளித்தவர்களின் தொகை மொத்த வாக்காளர் தொகையில் 25 சத விகிதமாகும்.

இன்று 500 ராஜ்யசபை ஸ்தானங்களுக்கும், 182 லோகசபை ஸ்தானங்களுக்கும் தேர்தல்கள் நடைபெறுகின்றன இன்று நடைபெறும் ராஜ்ய சபைத் தேர்தல் ஸ்தானங்கள் வருமாறு:

ஆந்திரப்பிரதேசம் 96, அஸ்ஸாம் 63, மத்திய பிரதேசம் 56, தமிழ்நாடு 55, மைசூர் 64, உத்தர பிரதேசம் 122, மேற்கு வங்காளம் 44, ராஜஸ்தான் 1.

இன்று நடைபெறும் தேர்தலில் லோகசபை ஸ்தானங்கள் வருமாறு:

உத்தரபிரதேசம் 58, ஆந்திரபிரதேசம் 42, மத்தியபிரதேசம் 25, தமிழ்நாடு 11, அஸ்ஸாம் 12, மைசூர் 8, ஒரிஸ்ஸா 4, ராஜஸ்தான் 1, மேற்குவங்காளம் 19, மணிப்பூர் 2

# தியாகராஜ சுவாமிகள் உற்சவ இசைவிழா

## வண்ணை நாவலர் பாடசாலையில் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவ இசை விழா அடுத்து வரும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில் வண்ணை நாவலர் பாடசாலையில் அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

முதல் நாள் விழாவை வடபெரும்பாக உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் ஆரம்பித்து வைப்பார். அடுத்து வித்தியாதிகாரி திரு. எஸ். தணிகாசலமும், மூன்றும் நாள் விழாவில் யாழ்ப்பாண உயர் நீதி மன்ற நீதியரசர் கலாநிதி எச். டபிள்யூ தம்பையா கியூ. ஸி. யும் திறப்புரை நிகழ்த்துவார்கள். இவ்விழாவில் ஈழத்து இசைக் கலைஞர் பலரும் பங்குபற்றி இசை விருந்தளிப்பர். சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பூஜையும், வித்துவான்களின் பஜனையும் நடைபெறும்.

# கடற்படைக் கமிஷன்

## பிரிவிகவுன்சில் அப்பீல் மனு இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது

கொழும்பு, திங்கள்

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் சுப்ரீம் கோர்ட்டினல் மரணதண்டனை விதிக்கப்பட்டு அப்பீல் நீதிமன்றத்தினல் ஆயிட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட புத்தரகித்தாவும் எச். பி, ஜயவர்த்தனவும் அப்பீல் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவிக்கவுன்சிலுக்கு மனுச் செய்வதற்கான மனு பூர்த்தியாகும் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது. பூர்த்தியானதும் லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழக்கறிஞர்கள் மூலம் பிரிவிகவுன்சிலுக்குத் தாக்கல் செய்யப்படும்.

---

## புதிய மூன்று மீன்பிடி துறைமுகங்கள்

கொழும்பு, திங்கள்

காலி, தங்காலை, பெருவளை ஆகிய இடங்களில் புதிய மூன்று மீன்பிடித் முறைமுகங்களை அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

## விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, திங்கள்

கடத்தலில் ஈடுபட்டதாக கடற்படையைச் சேர்ந்த சில அதிகாரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணைசெய்வதற்காக நியமிக்கப் பட்ட விசாரணைக் கமிஷன் தனது விசாரணையை இன்று மீண்டும் ஒரு மாதத்துக்கு ஒத்திவைத்தது.

கமிஷனின் தஸ்தாவேஜுகள் வைத்திருப்பவர்கள் விடுதலை செய்யப்பட முடியாத நிலையிலிருப்பதுதான் விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்படுவதற்குக் காரணமாகும்.

இரகசியப் பொலிஸ் பகுதி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ். ஏ. திஸநாயக்கா விசாரணைக் கமிஷன்முன் இதற்கு விளக்கம் தெரிவிக்கையில் "இப்பொழுது விசாரணை செய்யப்பட்டு வருபவர்களில் அவர்களும் ஒரு பிரிவினர்" என்று கூறினர்.

"தஸ்தாவேஜுகளைப் பொறுப்பெடுத்து கமிஷன் முன்னிலையில் சமர்ப்பிக்கக் கூடிய வேறு எவரும் இல்லையா?" என்று கமிஷனர் திரு. கே. டி. டி' சில்வா கேட்டார்.

திரு. திஸநாயக்கா: இல்லை ஐயா! போதியளவு சேவை அனுபவம் வாய்ந்த வேறு எவரும் எனக்கு இல்லை. இந்த வேலையைச் செய்யக் கூடிய வேறு எவரும் இல்லை. எங்கள் இலாகா மிகவும் சிறிய ஒரு பகுதி.

கமிஷனர்: இந்த விசாரணையை இன்னும் இரண்டு வார காலங்களுக்குள் முடித்துவிடலாமென எதிர்பார்த்தேன்.

கடற்படை அதிகாரிகள் சிலரின் சார்பில் ஆஜரான திரு. ஏ. எச். ஸி. டி 'சில்வா, இந்த விசாரணையை சிலகாலத்துக்கு ஒத்திவைக்கலாமென்று கூறினர்.

இதன் பின் விசாரணையை மார்ச்மாதம் 19-ந் திகதிக்கு கமிஷனர் ஒத்திவைத்தார்.

## புதிய மேயர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்டார். டாக்டர் தருமலிங்கத்தின் பெயரை பிரேரித்தவரான திரு. துரைராசா, 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ந் திகதி கைச் சாத்திடப்பட்ட ஒப்பந்தப்படி டாக்டர் தருமலிங்கம் தந்த சம்மதத்தின் பேரிலேயே தான் அவரைப் பிரேரித்ததாக தெரிவித்துக்கொண்டாராயினும் "அந்த ஒப்பந்தம் அண்மையில் காற்றில் பறந்து விட்டது" என டாக்டர் தருமலிங்கம் தெரிவித்து அபேட்சகராக நிற்க மறுத்து விட்டார். எனவே துரைசாசாவால் மேற்கொண்டு எதுவும் செய்ய முடியாத நிலையில் திரு. ஜேக்கப் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

### கரகோஷமும் பட்டாசும்

தேர்தல் முடிவைக் கமிஷனர் அறிவித்தும் சபையிலிருந்து பலத்த கரகோஷமும் வெளியிலிருந்து பட்டாசு வெடிச் சத்தமும் கிளம்பின.

நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதும் மணிக்கு மணி நிலைமைகளை மாற்றிய வைத்துக் கொண்டு சென்றதுமான இத்தேர்தலின் முடிவை அறிய நகர மண்டபத்தில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். வெற்றி வாகை சூடி வெளியே வந்த திரு. ஜேக்கப்பை வரவேற்க கனவான்கள் ஒப்பந்தத்தின் மூலகர்த்தாக்களான யாழ்ப்பாண எம். பி. திரு. ஏ. டி. துரையப்பாவும் தமிழரசுக்கட்சி பிரமுகர்களும் காத்திருந்தனர். ஆதரவாளர்களால் வரவேற்கப்பட்டு திரு. ஜேக்கப் மங்கள வாத்திய சகிதம் வாடி வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து பிரதான வீதி வழியாக அவரது இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## நள்ளிரவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வி. எம். எம். அபுசாலி ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட எண்மர் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளனர்.

அந்த ஒப்பந்தத்தில் பின் வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஊழலின்றி நடைபெற தீர்மானம்

யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகம் சீராக ஊழலின்றி நடைபெறுவதற்கு நாம் பின்வரும் தீர்மானங்களைச் செய்து கொள்ளுகிறோம்.

நிர்வாகம் முழுவதும் தமிழிலேயே நடைபெற வேண்டும்.

கேள்விப்பத்திர பரிசீலனைக் குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும்.

தமிழ்மொழி உரிமைக்கான இயக்கங்களை யாழ்ப்பாண மாநகரசபை ஆதரிக்க வேண்டும்.

சபைக்குரிய அதிகாரங்களை மேயரிடம் ஒப்படைக்காமல் சபைக்கே இருக்க வேண்டும்.

### அடுத்தவருடம்ராஜினமா செய்ய வேண்டும்

நாளை (19-2-62) திங்கட்கிழமை நடைபெறும் மேயர் தெரிவில் திரு. எம். ஜேக்கப்பை ஆதரிப்போம். திரு. எம். ஜேக்கப் 21-1-63-ல் தன் மேயர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்ய வேண்டும். அதையடுத்துவரும் மேயர் தெரிவில் திருவாளர்கள் பி. எஸ. சோமசுந்தரம், என். டி. செல்லத்துரை, ஜே. எஸ. அழகையா, டாக்டர் எஸ. ஏ. தர்மலிங்கம் ஆகியோர் நியமிப்பவரையே ஆதரிப்போம். இந்த நால்வரும் நியமிப்பவரையே அடுத்த வருடம் 20-1-63-ம்திகதி உதவி மேயராகத் தெரிவு செய்வோம்.

## வாக்குறுதியைக் காப்பாற்ற....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் உட்பட தமிழரசுத் தலைவர்கள் பலர் தெரிவித்தனர். அதற்கமையவே நாம் இறுதிநேரத்தில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம்.

திரு. யேக்கப்பின் ஆழ்ந்த அறிவும் அரசியல் ஞானமும் முதிர்ந்த வயதும் பழுத்த அனுபவமும் வருங்காலத்தில் இந்த மாநகரசபையைக் சீர் திருத்தியமைத்து ஒவ்வொரு துறையிலும் சிறப்புடனது வேலை செய்ய உதவுமென நான் நம்புகிறேன்.

வருங்காலத்தில்புகுதல் இந்த மாநகரசபையில் நகரபிதாவும் அங்கத்தவர்களும், ஆணையாளரும், சிப்பந்திகளும், தத்தம் கடமையைச் செவ்வனே செய்யவும், ஒருவருடைய கடமையில் அவசரமின்றி மற்றவர்கள் தலையிடாது உண்மையான சகோதரதத்துவ அடிப்படையில் ஒற்றுமையாக காரியங்களை செய்து முடிப்பார்களெனவும் உறுதியாக நம்புகிறேன். ஆணையாளர், சிப்பந்திகளின் வேலையில் அவசரமில்லாத அரசியல் தலையீடு இருக்காது பார்த்துக்கொள்ளுவதோடு அவர்களுக்குரிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று புதிய நகர தலைவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### வேற்றுமைகளை மறந்துவிடுவோம்

மேலும் எங்களுடைய அரசியல் கொள்கைகள் எதுவாகவிருந்தாலும் நாங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக விருந்தாலும் எல்லோரும் எங்களுடைய பேதங்களை மறந்து, மனக்குரோதங்களைத் துறந்து நகரத்தின் வளர்ச்சிக்காக, பொது மக்களின் நன்மைக்காக ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டுமென தாழ்மையாக ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

காதி எம். எம். சுல்தான் பேசுகையில் யாழ்ப்பாண நகருக்கு முதன் முதலாக ஒரு கத்தோலிக்க சமயத்தவர் மேயராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டியதோடு அனுபவம் வாய்ந்த ஒருவர் மேயராகக் கிடைத்திருப்பது மகிழ்ச்சியானதென்றும தெரிவித்தார்.

திரு. என். தேவபாலசுந்தரம் கடைசிநேரத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டுப் பேசுகையில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் திரு. துரைராசாவின் 'தும்மலை' உதறித் தள்ளிவிட்டு திரு. துரையப்பாவின் 'இருமலை' வாங்கிக் கொண்டுவிட்டனர் எனத் தெரிவித்தார்.

### கமிஷன் நியமித்தால் அம்பலமாகும்!

திரு. கே. எஸ். நடராசா பேசுகையில் கடந்த ஒருவடத்தில் மாநகர சபையின் சர்வாதிகாரப் போக்கு, அங்கத்தவர்களையே பியோன்களிலும் கீழாக மதித்து வைத்திருந்ததெனவும் சென்ற வருடத்தில் நடைபெற்ற சீர்கேடான நிர்வாகம்பற்றி கமிஷன் நியமித்தால்தான் அவற்றை அம்பலப்படுத்தத் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்தார்.

திரு. ஜே. எஸ். அழகையா பேசுகையில் கூறியதாவது:

கட்சிக்கோ தனிப்பட்டவர்களுக்கோ வர்ணம் பூச எங்களை மக்கள் தெரிந்தனுப்பவில்லை. நகரபிதாக்கள் என்ற பெருமையை சரியாகப் பாதுகாக்க நல்ல முறையில் ஒழுகப் பழகிக் கொள்ள வேண்டும். இந்த இடத்தை ஒரு அரசியல்- அரங்கமாகப் பாவிக்கக் கூடாது. வரியிறுப்பாளர்கள் மக்கள் ஆகியோருக்கு நல்ல சேவை செய்யவே இந்த இடத்தை உபயோகிக்க வேண்டும். கட்சிப்பற்று எங்களுக்குஉண்டு தான். ஆனல் அவற்றை மறந்து பொதுத் தொண்டாற்ற வேண்டியது அவசியம்.

ஹாஜி எம். எம். சுல்தான் பேசுகையில் சென்ற ஒருவருட காலத்தில் அங்கத்தவர்கள் மனிதர்களாகக் கவனிக்கப்படவில்லையென்றும் தாங்கள் வாழவும் மற்றவர்களை வாழவைக்கவும் ஒரு சந்தர்ப்பம் வரும் என எதிர்பார்த்திருந்ததாகவும் அச்சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதாகவும் இன்றைய வெற்றியில் தமிழரசுக் கட்சிக்கும் துரையப்பா கட்சிக்கும் சமபங்குண்டென்றும் முஸலிம்கள் சார்பில் புதிய மேயருக்குப் பாராட்டுதல்களை தெரிவிப்பதாகவும் கூறினர்.

### மக்களே தெரிவு செய்யவேண்டும்

திரு. எஸ. இராசரத்தினம் பேசுகையில் அடிக்கடி மேயர்கள் தெரிவை நடாத்துவதால் நல்ல நிர்வாகம் ஏற்பட முடியாமலிருப்பதாகவும் மேயரை மக்கள் தெரிவு செய்யும் முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினர்.

திருவாளர்கள் டி. எஸ. துரைராசா, பி. எம். ஜோன், பி. எஸ. சோமசுந்தரம், என். டி. செல்லத்துரை, ஏ. ஜி. இராஜகுலசூரியர் ஆகியோரும் புதிய மேயரைப் பாராட்டிப் பேசினர்.

உதவி மேயர் திரு. துரைராஜசிங்கம் பேசுகையில் முன்னுள் மேயர் திரு. டி. எஸ. துரைராசா தமிழரின் போராட்டங்களின்போது மிகவும் பாடுபட்டுழைத்தாரெனவும் அவருக்கு நன்றி செலுத்த வேண்டுமென்றும் கூறினர்.

பாராட்டுதல்களுக்கு புதிய மேயர் திரு. ஜேக்கப் நன்றி தெரிவித்துப் பேசினர். அவர் தெரிவித்தாவது:

ஒருவனுடைய பிறப்பையோ மதத்தையோ, கட்சியையோ பாராமல் திறமையுள்ளவர்களைக் கருமமாற்ற வைக்க வேண்டும். திறமைசாலிகளைப் போஷித்து அவ்வக்கருமங்களைச் செய்துவித்துக் கொள்ள வேண்டும். நாட்டு நலனையே மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் மனதில் கொள்ள வேண்டும். தனிப்பட்ட மனத்தாங்கல்களை மறந்து நகரின் முன்னேற்றத்துக்கு அங்கத்தவர்கள் அனைவரும் ஒத்துழைத்து நடக்க வேண்டும்.

## பரீட்சை சபை கூடவில்லை

கொழும்ப, திங்கள்

பரீட்சைச் சபையிலுள்ள அங்கத்தவர்கள், கல்வி அமைச்சரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு விரும்பாததினல் பரீட்சைச் சபையின் ஒரு கூட்டம்கூட சென்ற வருடம் நடைபெறவில்லை.

இந்த விபரம் சமீபத்தில் நடைபெற்ற தேசியக் கல்விக் கமிஷனின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சைச் சபை இயங்காமலிருப்பதற்கு ஒரு காரணம் அதன் தலைவராக பரீட்சைக் கமிஷனர் இருப்பதுதானென்றும்பரீட்சைக் கமிஷ்னர் ஒரு அரசாங்க ஊழியராக இருப்பதால் அமைச்சரின் உத்தரவுகளை அவர் அமுல் நடத்த வேண்டியிருப்பதும் தான் என்று தேசியக் கல்விக் கமிஷன் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது சபை, அமைச்சருடன் அபிப்பிராய பேதம் கொண்டதும் சபைக் கூட்டத்தைத் தலைவர் கூட்டாது விட்டுவிட்டார் என்று கமிஷன் கருத்துத் தெரிவித்தது.

கேள்வி பதில்

# சந்தேகம் தீருங்கள்

ஜி. எம்.

கேள்விகளைத் தபால் அட்டையில் பின்வரும் விலாசத்துக்கு எழுதி அனுப்புங்கள்.

"மாணவர் மலர்" த. பெ. எண்: 49
ஈழநாடு யாழ்ப்பாணம்

கேள்வி: இரும்புத்துண்டு தண்ணீரில் அமிழ்கின்றது. ஆனல் கப்பல் மிதக்கின்றது ஏன்?

எஸ். நடராஜா, கச்சேரி வீதி, கொடிகாமம்

பதில்: இரும்பு நீரில் அமிழ்ந்திருக்கும்பொழுது இரும்பின் நிறை, நீரின் மேல் நோக்கித் தள்ளும் விசையிலும் கூடியதாக இருக்கிறது. ஆனல் ஒரு கப்பலினற் பெயர்க்கப்படும் கன அளவு நீரின் நிறை அக்கப்பலின் நிறைக்குச் சமனய் இருப்பதினுல் அது மிதக்கிறது. ஒரு கப்பலில் எந்த அளவுக்கு பாரம் ஏற்றலாம் என்பதைக் குறிக்கும் 'பிளிம்சோற் கோடு' கப்பல்களில் உண்டு. பாரம் ஏற ஏறக் கப்பலும் நீரில் அமிழ்ந்துகொண்டே போகும். இதைத் தடுக்க 'பிளிம்சோற் கோடு' துணைபுரிகிறது.

கேள்வி: மண் புழுவை இரு துண்டுகளாக வெட்டினல் ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு புழுவாகுமா?

ச. கி. தங்கரத்தினம், ரோ க. பாடசாலை, திருநெல்வேலி

பதில்: ஆம். மண் புழுவை இரு துண்டுகளாக வெட்டினல், முன் பகுதியையும் பார்க்க பின் பகுதி விரைவாக வளர்ச்சி பெற்று ஒரு புழுவாகிவிடும். ஆனல் முக்கியமான பாகங்கள் வெட்டப்பட்டால், புழு முழு வளர்ச்சியடையாது. மண் புழு நீளப்பாட்டுக்கு வெட்டப்பட்டால், புழு இறந்துவிடும்.

கேள்வி: நாம் ஒரு வண்ணத்திப் பூச்சிை [illegible] ராசா வண்ணத்திப் பூச்சியா அல்லது சாதாரண வண்ணத்திப் பூச்சியா என்று எப்படி அறியலாம்?

எல். ஜீவாமித்ரன் ஜெயசிங்கம், வட்டுக்கோட்டை

பதில்: வண்ணத்திப் பூச்சிகள் விதம் விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ராசா வண்ணத்தி பார்ப்பதற்குப் பெரிதாகவும், நிறம் சிவப்பாகவும் இடையில் கறுப்பு கலந்ததாகவும் இருக்கும். நீங்கள் சாதாரண வண்ணத்தி என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்? ராசா வண்ணத்தியை விட மற்றைய வண்ணத்திப் பூச்சிகளும் அதே போன்று வேறு வேறு நிறங்களில் இருக்கும். மனிதரில் கறுப்பர், வெள்ளையர் என்று உண்டுதானே. பார்த்தாலே தெரிகிறது தானே.

கேள்வி: விஞ்ஞானத்தை மாணவர்கள் ஆங்கிலத்தில் கற்க ஏதற்காக விரும்[illegible]ருர்கள்?

செல்வி. க. தேவகி, பண்டத்தரிப்பு

பதில்: ஆரம்பத்தில் விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தில் கற்றவர்களுக்கு அதைத் தொடர்ந்து ஆங்கிலத்திலேயே படிப்பது சுலபம். ஆனல் தமிழ் மொழியில்—தாய் மொழியில் எதையும் கற்பது பெருமையும் மதிப்பும் கூட. அப்படித்தானே? நீங்களும் விரும்பினல் தமிழில் விஞ்ஞானத்தைப் படிக்க முடியுந்தானே?

கேள்வி: குழந்தை பிறக்கும்போதே ஞாபக சக்தியுடன் பிறக்கின்றதா?

ஜோசப். கிரப்பனை, கம்பளை.

பதில்: குழந்தைகள் பிறக்கும்போது ஞாபக சக்தியுடன் பிறப்பதில்லை என்று ரஷ்யவிஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிருர்கள்.

கேள்வி: எனது நண்பி விஞ்ஞானத்தை தமிழில் கற்ருல் மரியாதை இல்லை என்கிருர். உங்கள் பதில் என்ன?

—க. தேவகி, பண்டத்தரிப்பு.

பதில்: உங்கள் நண்பி விஞ்ஞானத்தை தமிழில் கற்க முடியாது —மரியாதை இல்லை என்று கூறுவதைக் கேட்டு வேதனை அடைவதைவிட வேறு என்ன இருக்கிறது? இந்தப் பிற்போக்கான கொள்கையினலேதானே இன்று நாமும் நமது மொழியும் இந்த நிலைக்கு வந்திருக்கிருேம் நமது மொழியைக் கற்று, மற்றவர்களுக்கு செல்விகொடுக்கும் அளவுக்கு நாம் (உங்கள் நண்பி உட்பட!) மாறவேண்டும். மரியாதை இல்லை என்று உங்கள் நண்பி எதைக் கூறுகின்ருர்?

கேள்வி: உலகில் பெரிய பணக்காரர் யார்? தயவுசெய்து பதிலளியுங்கள்.

—யு. எஸ். பிருன்சிஸ், தறவல பஜார், டிக்கோயா.

பதில்: குவைத் நாட்டின் அதிபர் ஷேக் அப்துல்லா! இவருக்கு தினசரி 50 முதல் 100 லட்சம் ரூ வருமானம் கிடைக்கிறது! மற்றும் ஹைதராபாத் நிஸாம் மன்னர், சவுதி அரேபியா மன்னர், ஹென்றி போட், அல்பேட் குற[illegible], நபீல்ட் பிரபு ஆகியோ[illegible]ரும் பணக்காரர்கள்தான்!

கேள்வி: உலகத்தின் முதலாவது மத்திய மின்சார நிலையம் எங்கு கட்டப்பட்டது. அந்தப்பெருமைக்குரிய விஞ்ஞானியின் பெயரைக் கூறுவீர்களா?

—அன்வர், நியாஸ், இஸ்மத்,
ஹப்புகஸ்பிட்டியா, சம்பளை

பதில்: உலகத்தின் முதலாவது மத்திய மின்சார நிலையம் (World's First Central Power Station) நியுயோர்க நகரில் கட்டப்பட்டது. அந்தப் பெருமை விஞ்ஞானி எடிஸனையே சாரும்.

கேள்வி: எட்டுக்கிரகம் கூடினதால் உலகம் அழியும் என்ருர்கள். அது ஏன் அழியவில்லை?

—சி. கமலநாதன், மணற்காடு, கரைநகர்.

பதில்: உலகம் முற்றாக அழிந்துவிடும் என்று எவரும் சொல்லவில்லையே! எட்டுக்கிரக சேர்க்கையினல் பூகம்பம், கடல் கொந்தளிப்பு, பல மாற்றங்கள் ஏற்படும் என்றுதான் தெரிவித்திருந்தார்கள் அண்மையில் ஹொங்கொங்கில் பூகம்பம் ஏற்பட்டதை நீங்கள் கேள்விப்படவில்லையா! மேறகு ஜெர்மனியில் சுரங்க விபத்து ஏற்பட்டு 305 பேர் மரணமானுர்கள்! பாஸ்டனுக்கு மிகக் கடுமையான பூகம்பம்! ஐரோப்பாவின் பல பகுதிகளில் சூறாவளி, பனிப்புயல்! பிரான்ஸில் 70 மைல் வேகத்தில் புயல் வீசியது! உலகம் ஏன் அழியவில்லை என்கிறீர்களே. உலகம் அழிந்தால் நான் எங்கே நீங்கள் எங்கே?

கேள்வி: ஓணான் தனது நிறத்தை ஏன் அடிக்கடி மாற்றிக் கொள்கிறது?

பதில்: எதிரிகளிடமிருந்து தப்பிக்கொள்ளவும், மறைந்து இருந்து உணவைத் தேடிக்கொள்ளவும், ஓணான் தனது நிறத்தை மாற்றுகிறது. சில சமயங்களில் ஆண் ஓணானின் கீழ்க் கழுத்து சிவந்திருக்கும். சிவந்த கழுத்தைக்கண்டு, சிலர் அதைக் குருதியுறிஞ்சி (Blood Sucker) என்று தவருகக் கருதுவதுமுண்டு

கேள்வி: இரவில் மரங்களுக்குக் கீழ் தங்கக்கூடாதா?

—க கனகராயன், 25, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

பதில்: இரவில் மரங்களுக்குக் கீழ் தங்கக்கூடாது. இரவில் மரங்கள் அசுத்தமான காற்றை வெளியிடுவதால், அது நமக்கு கூடாது. அவசியமில்லாமல் ஏன் நாம் ஆபத்தை விலைக்கு வாங்க வேண்டும்?

கேள்வி: 'விஞ்ஞானம்' என்ற தொடரில் வெளியாகும் கட்டுரைகள் எங்களுக்கு மிகுந்த பலனைக் கொடுக்கிறது. தொடர்ந்து பிரசுரிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

—செல்வி எஸ. சரோஜா,
மெயின் வீதி, திருக்கோணமலை.

பதில்: பாராட்டுதலுக்கு நன்றி. கட்டுரைகளை 'மகான்' தொடர்ந்து எழுதி வருகின்ருர். உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்.

கேள்வி: விசர் நாய்க்கடி மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?

—இ. அரசரத்தினம். வேலணை.

பதில்: விசர்நாய்க் கடி மாற்று மருந்தை லூயி பாஸ்டர் என்பவர். 1880-ம் ஆண்டு கண்டு பிடித்தார்.

('மாணவர் மலர்' பகுதியில் வெளியாகும் விஞ்ஞானக் கட்டுரைகளை வாசித்து, பாராட்டியமைக்கு எமது நன்றி.)



# மாணவர் மலர்



விஞ்ஞானம்-3.

## ஒளி உலகின் கண்

—மகான் -

'விஞ்ஞானம்' என்ற தொடரில் வெளியாகும் கட்டுரைகளைப் படிப்பதில், மாணவர்கள் அதிக ஊக்கம் செலுத்துவதையறிந்து மகிழ்ச்சியடைகின்ருேம். ஏற்கனவே வெளியான கட்டுரைகளைப் படித்துவிட்டு, விளங்காதவற்றைச் 'சந்தேகம் தீருங்கள்' என்ற பகுதிக்கு எழுதித் தமது சந்தேகத்தைத் தீர்க்கின்ருர்கள்.

இலை என்ருல் என்ன; வண்ணத்திப் பூச்சியின் வாழ்க்கை ஆகியவற்றைப்பற்றி சென்ற தடவைகளில் விரிவாக அறிந்துகொண்டோம் இம்முறை ஒளிபற்றி ஆராய்வோம்.

ஒளி என்றதும், நீங்கள் சூரியனைத்தான் கருதுகிறீர்கள். சூரியன் மட்டும் ஒளியல்ல. சந்திரனும் நமக்கு ஒளியைத் தருகின்ருன். நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன. மண்ணெண்ணெய் விளக்கு, தேங்காயெண்ணெய் விளக்கு முதலியன எரியும்போது ஒளி வீசுகின்றது. மின்சாரத்திலுலும் ஒளி உண்டாக்கப்படுகின்றது.

பகலில் நாம் எப்பொருளையும் பார்க்கமுடிகிறது—நமது கண்களால். ஆனல் இரவில் நாம் நமது கண்களைத் திறந்திருந்தாலும் பொருள்களைக் காணமுடியாது. ஒளி பொருள்களில் பட்டுத் தெறித்துவந்து எங்கள் கண்களில் படுவதினலேயே நாம் அப்பொருள்களைக் காண்கின்ருேம். உதாரணமாக இரவில் நாம் வெளியில் செல்கின்ருேம் என்று வைத்துக்கொள்ளுங்கள். எங்கும் கும்மிருட்டு. கண்களுக்கு எதுவுமே தெரியாது. அப்படியான இருட்டு. நடந்து செல்லும் பொழுது காலில் ஏதோ தட்டுப்படுவது போன்ற ஓர் உணர்ச்சி. என்னவென்று பார்க்க முடியவில்லை. அப்பொழுது கையில் இருந்த 'டார்ச்' வெளிச்சத்தை அடிக்கின்ருேம். காலில் தட்டுப்பட்டது ஒரு பெரிய கல் என்பது தெரிய வருகிறது. பார்த்தீர்களா? 'டார்ச்' வெளிச்சத்திலிருந்து ஒளி அப்பொருளில் பட்டு (கல்லில்) தெறித்து வந்து எங்கள் கண்களில் பட்டதினலேயே நாம் அப்பொருளைக் கல்லென்று உணர முடிகின்றது. இதுவே ஒளியாகும்.

சூரியன் நமக்கு இயற்கை ஒளியைத் தருகின்ருன். பூமியைவிட 13,00,000 மடங்கு பெரியது. பூமியிலிருந்து சூரியன் 9,37,00,000 மைல் தூரத்திலுள்ளது. பூமிக்கும் சந்திரனுக்குமுள்ள இடைத்தூரம் இரண்டு லட்சத்து நாற்பதினுயிரம் மைல்! சூரிய ஒளி பூமியை வந்தடைய எட்டு நிமிடங்கள் செல்லும். ஆனல் பூமிக்கு அண்மையிலுள்ளதென்று சொல்லக்கூடிய நட்சத்திரத்தின் ஒளி பூமியை வந்தடைய ஏறக்குறைய நான்கு வருடங்கள் செல்லும்! நட்சத்திரங்கள் பகலில் தெரியாது இரவில் மட்டும் தெரிவதற்குக் காரணம், சூரியன் நட்சத்திரங்களிலும் பார்க்க மிகவும் அண்மையில் இருப்பதுதான். இதனல் சூரியனின் பிரகாசமான ஒளி நட்சத்திரங்களைப் பகலில் தெரியாதவாறு மறைத்துவிடுகிறது. சந்திரனும், மற்றைய கோள்களும் இரவில் ஒளி வீசுகின்றன அல்லவா? ஆனல் அவற்றின் ஒளி சுய ஒளியல்ல. அவைகளிற் தெறித்துவரும் சூரிய ஒளி, அவைகளின் ஒளிபோன்று பூமிக்கு வருகின்றது. வளியினூடாக ஒளி ஒரு செக்கண்டுக்கு 1,86,000 மைல் வேகத்திற் செல்லும்.

சூரியனின் குறுக்களவு மாத்திரம் எட்டு லட்சத்து அறுபத்து நாலாயிரம் மைல் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிருர்கள். சூரிய ஒளியினல் நாம் பெரிதும் பயனடைகின்ருேம். அவைகளை நீங்களும் அறிந்திருப்பீர்கள். ஆனல் சூரியன் ஒரு கிருமிநாசினி என்பதையும் ஞாபகத்தில் வைத்திருங்கள். தொற்று நோய்களுக்குக் காரணமான விஷக் கிருமிகளை சில நிமிட நேரத்தில் சூரிய ஒளி கொன்றுவிடுகிறது. சூரிய ஒளி எங்கள் உடம்பில் படுவதினல், 'டி' என்னும் விட்டமின் உயிர்ச்சத்து உண்டாகி எலும்புகளைப் பலப்படுத்துகின்றது.

சந்திர கிரகணம், சூரிய கிரகணம் எப்படி உண்டாகின்றன என்று கேட்கிறீர்களா? பூமி சூரியனைச் சுற்றுகிறது. சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. இப்படிச் சுற்றிவரும்பொழுது சந்திரனின் நிழல் பூமியிற்படும் போது சூரிய கிரகணமும், பூமியின் நிழல் சந்திரனிற் படும் போது சந்திர கிரகணமும் உண்டாகின்றது.

ஒளியைப்பற்றிக் கூறிக்கொண்டு போகும்பொழுது உங்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றுவதை நானும் உணருகின்றேன். மழை காலத்தில் மின்னலின் 'பளிச்', 'பளிச்' என்ற வெட்டுகள் நம் கண்ணைப் பறிக்கின்றன. இடியின் எதிரொலி காதைப் பிளக்கின்றது. அப்படியானல் மின்னல் முதலில் தோன்றுகிறதா அல்லது முழக்கம் முதலில் இடம் பெறுகிறதா? சந்தேகமில்லாமல், மின்னல்தான் முதலில் தோன்றும் என்று நீங்கள் பயப்படாமல் கூறலாம். காரணம் மின்னலும் இடியும் ஒரே நேரத்தில் தோன்றினலும், மின்னல்தான் முதலில் தோன்றும். ஒலியின் வேகத்திலும் பார்க்க ஒளியின் வேகம் தான் கூட. உதாரணத்துக்கு, வாணவேடிக்கையைத் தூர நின்று பார்ப்பவர்களுக்கு, ஒளியைக் கண்டு சிறிது நேரத்துக்குப் பின்னரே சத்தம் (ஒலி) கேட்கிறது. புரிந்துகொண்டீர்கள்தானே?

சூரிய ஒளியிற் பல வர்ணங்கள் கலந்திருக்கின்றன; வான

(7-ம் பக்கம் பார்க்க)

## பார்க்க வாருங்கோ!

— மு. க. சூரியன் —

கப்பல் வருகுது கப்பல் வருகுது
பார்க்க வாருங்கோ!
கப்பல் ஒன்று கடலில் வருகுது
பார்க்க வாருங்கோ!

நீலக் கடலில் மிதந்து வருகுது
பார்க்க வாருங்கோ!
கோல நீரைக் கிழித்து வருகுது
பார்க்க வாருங்கோ!

வானைத் தொடுகுது கப்பற் பாய்மரம்
பார்க்க வாருங்கோ!
ஆனை போல அசைந்து வருகுது
பார்க்க வாருங்கோ!

ஆழக் கடலில் கப்பல் வருகுது
பார்க்க வாருங்கோ!
தோழச் சிறுவர் ஒன்று கூடிப்
பார்க்க வாருங்கோ!

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

செவ்வாய், 20-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 சேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-'0 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 இருபது கேள்விகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 9-45 பி. வெங்கடசாமி—நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 திருவள்ளுவமாலைப்பாடல்கள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கம்பனின் கவியல்—பேச்சு, 7-45 சாத்தூர் ஏ.ஜி. சுப்பிரமணியம்—பாட்டு, 9-15 'சூழ்ச்சி'—நாடகம், 9-30 மெல்லிசை, 9-50 'மன்னர்கள் நற்பணி'—பேச்சு.

## இளந்தாரகை கோஷ்டி வெற்றி

சண்டிக்குளி, ஞாயிறு

சண்டிக்குளி இளந்தாரகைக் கழகத்திற்கும், கொழும்புத்துறை வை.எம்.எஸ்.ஏ. கோஷ்டிக்கும் சனிக்கிழமை ஒருசிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் இளந்தாரகைக் கோஷ்டி 9 விக்கட்டுகளாலும் 5 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

## ஒளி உலகின் கண்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லில் நாம் காணும் அத்தனை நிறங்களும் சூரிய ஒளியிலுள்ளனவே சூரிய ஒளி ஏழு நிறங்களாலானது என்று ஐசெக் நியூட்டன் என்ற அறிஞர் கண்டுபிடித்தார். வானவில், சிறிது தூறலும் வெய்யிலும் உள்ளபோது சூரியனுக்கு எதிர்த் திசையில் தோன்றும். முற்பகலில் மேற்கிலும், பிற்பகலில் கிழக்கிலும் வானவில் தோன்றும். இதை அவதானித்துப் பாருங்கள்.

சூரிய ஒளியைப் பற்றித் தெரிந்துகொண்டீர்கள் தானே? மண்ணெண்ணெய் விளக்கு, தேங்காய் எண்ணெய் விளக்கு முதலியன எரியும்போது எண்ணெய்களிலுள்ள கரித்துணுக்குகள் வெப்பத்தினால் பிரகாசமடைந்து ஒளியைத் தருகின்றன. இதேபோல்தான் நிலக்கரி எரியும்போதும் அதனின்று உண்டாகும் வாயு பிரகாசமாக எரிந்து ஒளியைத் தருகின்றது.

நமது வீட்டில் மின்சாரத்தினால் 'பல்புகள்' எரிகின்றன. ஆமாம், மின்சாரத்தினாலும் ஒளி உண்டாக்கப்படுகின்றது. மின் விளக்கு (பல்ப்)களின் குமிழிலுள்ள 'தங்ஸ்டன்' (Tungsten) என்னும் உலோக இழைகளை மின்சாரம் வெப்பமாக்கும்போது அவை பிரகாசித்து ஒளியைத் தருகின்றன.

ஒளியின்றேல் உலகமில்லை. என்ன அப்படித்தானே? ஒளியின் உபயோகம் கணக்கிட முடியாது என்பதை அறிந்து கொண்டோம். அடுத்த முறை, எங்களது தோட்டங்களில் காணப்படும் மண்புழுவின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஆராய்வோம்.

## தலைமையாசிரியர் கூட்டம்

ஓமந்தை, திங்கள்

வவுனியா வட்டாரத் தலைமையாசிரியர் கூட்டம் வருகிற மாதம் 3-ம் திகதி வவுனியா தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென வவுனியா வித்தியாதரிசி திரு. ச. சபாபதி சகல பாடசாலைத் தலைமையாசிரியர்களுக்கும் அறிவித்துள்ளார்.

அத்தருணம் பாடசாலைகளை மாற்றி நிறுவுதல், விளையாட்டுப்போட்டி ஆகியனபற்றியும் ஆலோசிக்கப்படும் என அறியப்படுகிறது.

## றேயல் வெற்றி

மாவிட்டபுரம் ஞாயிறு

காங்கேசன்துறை றோயல் விளையாட்டுக் கழகத்திற்கும் போர்ட்யார்ட் கோஷ்டிக்கும் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் றேயல் 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

## பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது

ஓமந்தை, திங்கள்

இரண்டுவாரகாலமாக அம்மை நோய் காரணமாக மூடப்பட்டிருந்த பூந்தோட்டம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது.

தடுப்பு நடவடிக்கை எடுத்ததின் பயனாக இப்பொழுது தொற்றுநோயின் அறிகுறிகள் காணப்படவில்லை.

## தேன் என பொலிடோலை குடித்தபெண்

### 2 மணிநேரத்தில் மரணம்

பருத்தித்துறை, திங்கள்

அல்வாய் தெற்கைச் சேர்ந்த 16 வயதுடைய பரம்சோதி தனபாக்கியம் என்னும் இளம் பெண் பொலிடோல் என்னும் கிருமிநாசினியைக் குடித்ததால் மரணம் அடைந்ததாக தெரிய வருகிறது.

தேன் என நினைத்து பொலிடோலை குடித்தார் என விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக புலோலி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அப்பெண் சுமார் இரண்டு மணித்தியாலத்தில் மரணம் அடைந்தார்.

மரண விசாரணை அதிகாரி திரு. கே. தம்பிப்பிள்ளை தற்செயலாக நடைபெற்ற மரணம் என தீர்ப்பு வழங்கினர்.

## ஞானசம்பந்தர் கலைமன்றம்

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறையைச் சேர்ந்த புலோலி கிழக்கில் ஞானசம்பந்தர் கலைமன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

செல்வி யோகசவுந்தரி முருகேசு தலைவராகவும், செல்வி கு. சூரியகுமாரி செயலாளராகவும் கொண்ட நிர்வாகசபை ஒன்றும்தெரிவுசெய்யப்பட்டது.

மன்ற ஆதரவில் திருமதி பரமேஸ்வரி குமாரவேலு விளையாட்டு அரங்கு ஒன்றை திறந்துவைத்தார்.




# பாட்டனின் அப்பா பிறந்த இடம் எது?

## பெட்ரோலியம் ஸ்தாபனத்தில் வேலைக்கு மனுச்செய்வோர் கூறவேண்டும்

கொழும்பு, திங்கள்

இலங்கை பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனத்தில் அக்கவுண்டன்ட் (கணக்காயர்) சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர் (ஸ்டெனோ டைப்பிஸ்ட்) பதவிகளுக்கு கூட்டு ஸ்தாபனம் விண்ணப்பம் கோரியுள்ளது. 'கஸெட்டி'ல் பிரசுரமாகியுள்ள இந்த அறிவிப்பில் இந்த பதவிகளுக்கு மனுச் செய்பவர்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜைகளாக இருக்கவேண்டும். மனுச் செய்பவர்கள் தாங்கள் பிறந்த இடம், அவர்களுடைய தந்தையார் பிறந்த இடம், தந்தையாரின் தந்தை பிறந்த இடம் அவரின் (பாட்டனின்) தந்தை பிறந்த இடம் தெரிவிக்கவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது!

---

## அமெரிக்காவுக்கு வேண்டுகோள்

மாஸ்கோ, பெப். 19

ஆயுதங்களைக் கடலில் எறிந்துவிட்டு ரஷ்யாவுடன் நேச உறவு கொள்ளுமாறு ஸ்ரீமதி குருஷ்சேவ் அமெரிக்காவுக்கு நேற்று மாஸ்கோ வானொலி மூலம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். 10 நிமிஷம் மாஸ்கோ வானொலி மூலம் அவர் நிகழ்த்திய விசேஷ ஒலிபரப்பில் இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

## எரிகாயங்களினால் ஆஸ்பத்திரியில் அனுமதி

பையாகலை, திங்கள்

கும்பனித்தெருவைச் சேர்ந்த 41 வயதுள்ள வி. ஏப்ரஹாம் பெரேரா என்பவர் முகத்திலும் கைகளிலும் எரிகாயங்களுடன் நாகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இவருக்கு 7 குழந்தைகள் உண்டு. இவரின் நிலைமை கவலைக்கிடமாகவிருக்கிறதாக அறிவிக்கப்படுகிறது.

---

## உபதபாற் கந்தோரில் 35 வருட சேவை

கொடிகாமம், செவ்

கொடிகாமம் உபதபாற் கந்தோரில் சென்ற முப்பத்தைந்து வருடகாலம் கடமையாற்றிய போஸ்ட்மாஸ்டர் திரு. கே. வி. சின்னத்தம்பி இம்மாத முடிவில் இளைப்பாறுகின்றார் இவ்விடத்திற்கு கச்சாய் உபதபாற் கந்தோரில் பத்து வருடம் கடமையாற்றிய திரு. வி. எஸ். கே. யோகரத்தினம் தபாற் பகுதி இலாகா அதிபரால் நியமிக்கப் பெற்றுள்ளார்.

## வெலிசரை வானொலி நிலையம் ஏப்ரலில் ஒப்படைக்கப்படும்

கொழும்பு, திங்கள்

வெலிசரையிலுள்ள கடைசி பிரிட்டிஷ் தளமான கடற்படை வானொலி நிலையம் எச். எம். எஸ். ஹைபிளயர் இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதல் திகதி இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும்.

குறிக்கப்பட்ட காலத்துக்குள் கடற்படை, விமானப்படை தளங்களை பிரிட்டன் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என காலம் சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் ஒப்பந்தம்செய்யப்பட்டதற்கிணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதுபற்றி பாதுகாப்புவெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் அந்தத் தளம் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கம் அதை உபயோகிக்கும் எனக் கூறினர்.

# தேர்தல் முடிவுகளை அறிவிக்க 'ஆகாசவாணி' விசேஷ ஒழுங்கு

புதுடில்லி, பெப். 19

இந்திய பொதுத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதற்காக 'ஆகாசவாணி' விசேஷ ஒழுங்குகள் செய்திருக்கிறது.

பெப்ரவரி 25-ந் திகதி தொடக்கம் மார்ச் முதல் திகதி வரை தினசரி எட்டு விசேஷ ஒலிபரப்புக்கள் இடம்பெறும். இவற்றில் நான்கு இந்தியிலும் நான்கு ஆங்கிலத்திலும் ஒலிபரப்பப்படும். இந்த நிகழ்ச்சிகளை ஆகாசவாணியின் எல்லா நிலையங்களும் அஞ்சல் செய்யும். ஆங்கிலத்தில் தேர்தல் முடிவுகள் பின்வரும் நேரங்களில் அறிவிக்கப்படும்:- காலை 6 மணியிலிருந்து 6-15 வரையும் நண்பகல் 12 மணியிலிருந்து 12-15 வரையும் மாலை 4-30 மணியிலிருந்து 4-45 வரையும் இரவு 10-45 மணியிலிருந்து 11 மணி வரையும் ஒலிபரப்பப்படும்.

பிராந்திய செய்திகளிலும் தேர்தல் விபரங்கள் அறிவிக்கப்படும். சென்னையிலிருந்து தினசரி மாலை ஒலிபரப்பாகி திருச்சி நிலையம் அஞ்சல் செய்யும் தமிழ் நாட்டு பிராந்திய செய்தி அறிக்கையின் நேரம் தேர்தல் விபரங்களை அறிவிப்பதற்காக மேலும் ஐந்து நிமிஷ நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# மேற்கு ஜெர்மனியில் கறுப்பு பீங்கான் உற்பத்தி

## உலகின் கவனத்தை கவர்ந்துள்ளது

ஸெல்ப் (டாட்) பெப். 19

மேற்கு ஜெர்மன் பீங்கான் தொழிலில் மிகப் பிரபலமடைந்துள்ளது. நீண்டகால ஆராய்ச்சியின் விளைவாக ரோஸந்தால் கம்பெனி கறுப்புநிற பீங்கான் பொருள்களை தயாரிக்கும் முறையைக்கண்டுபிடித்துள்ளது.

ஐரோப்பாவிலேயே ரொஸந்தால் கம்பெனி மிகப் பிரபலமான பீங்கான் தயாரிப்பு ஸ்தாபனமாகும். இதற்கீடான பீங்கான் கம்பெனிகள் என்று ஜெர்மனியிலுள்ள பர்ஸ்டென்பர்க், மெய்ஸென், ஹட்ஸ்சென்ருதர் ஆகிய இடங்களிலுள்ளவைகளையும், இங்கிலாந்தில் வெட்ஜ்வுட் என்ற இடத்திலும், பிரான்ஸில் செவர்ஸ் என்ற இடத்திலுமுள்ள கம்பெனிகளையும் டேனிஷ் ராயல் போர்ஸிலேன் தொழிற்சாலையையும் சொல்லலாம்.

உலகிலுள்ள பீங்கான் பொருள் உற்பத்தியாளர்கள் எல்லோருமே இந்த கருப்புபீங்கான் விஷயமாக அதிக அக்கறைகாட்டி வருகின்றனர். ரோஸ்ண்தால் இந்தப் பொருளுக்கு 'போர்ஸிலேன் நோயர்' என்று பெயரிட்டுள்ளது. இப்பொருள், முழுவதுமே கருப்பு; கருப்பு வர்ணம் பூசப்பட்டதல்ல என்று இந்த ஸ்தாபனம் விளக்கியுள்ளது. பல்வேறு கருப்பொருள் "ஆக்ஸைட்"களை ஒன்றாக இணைப்பதின் மூலம் இந்த கருப்பு வர்ணம் ஏற்படுகிறதாம். மிக அதிகமான உஷ்ண நிலையில் இந்த கருப்பு வர்ணம் உண்டாக்கப்படுகிறது. பின்னர் ஹைட்ரோப்ளோரிக் அமிலத்தில் இப்பொருளை அமுக்குவது மூலம் பளபளப்பான பட்டு போன்ற தோற்றம் ஏற்படுகிறது.

இந்த பீங்கான் பொருள்களில் வர்ணம் தீட்டவும் சித்திரம் வரையவும் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பொருளுக்கு நூதன உருவமைப்பைக் கொடுக்க ரோஸன்தால் முயன்று வருகிறது பிரபல பின்னிஷ்ஓவிய நிபுணர். டாபியோ விர்க்காலா இச்சித்திரங்களை எழுத அமர்த்தப்பட்டிருக்கிறார்

# கயானாவில் வேலைநிறுத்தம் முடிவடைந்தது

ஜோர்ஜ்டவுன், பெப். 19

சென்ற சில தினங்களாக பிரிட்டிஷ் கயானாவில் அமளிதுமளிக்குக் காரணமாக இருந்த பொது வேலைநிறுத்தம் இன்று முடிவடைந்தது.

டாக்டர் செட்டிஜகனைப் பிரதம மந்திரியாகக் கொண்ட பிரிட்டிஷ் கயானா அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட வரி உயர்வுகளையும் கட்டாய சேமிப்புத் திட்டத்தையும் எதிர்த்து எதிர்க்கட்சியினர் ஆரம்பித்த பொது வேலைநிறுத்தத்தின் விளைவாக ஆர்ப்பாட்டங்களும், கைகலப்புக்களும் கொள்ளை முதலிய சம்பவங்களும் சென்ற சில தினங்களாக பிரிட்டிஷ் கயானாவின் தலைநகரான ஜோர்ஜ்டவுனில் நிகழ்ந்தன. நிலைமையைச் சமாளிப்பதற்காக பிரிட்டனிலிருந்து துருப்புக்களும் அழைக்கப்பட்டிருந்தன.

வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்திருந்த தலைவர்களுடன் பிரதமர் திரு. செட்டி ஜகன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தலைவர்களின் கோரிக்கைகள் பலவற்றுக்கு அவர் இணங்கியதாகவும் இதன் விளைவாக வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

•

யாழ்ப்பாணம் மனோகரா ஜெமினி கணேசன், பத்மினி நடித்த மீண்ட சொர்க்கம்

## மரண அறிவித்தல்

வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் என். மனோன்மணி என்பவரின் தாயார் திரு. செல்லம்மா என்பவர் மரணமாகிவிட்டார். அவரின் பூதவுடல் ஊறணி கடலை மைதானத்தில் 19-2-62 பிற்பகல் தகனஞ் செய்யப்பட்டது. மரண சகாயக் கொமிற்றி, ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம்.

## தேவை

பண்டத்தரிப்புக் கோவில் பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு கீழ் கூறப்படும் விபரங்களுக்கு அமைவாக லொறி லைசன்ஸ் உடைய ஓர் லொறிச் சாரதியும் கிளீனரும் தேவை.

சாரதி: வயது 25—50க்கும் உட்பட்டவர். பிணைப் பணம்: ரூ. 250.

கிளினர்: வயது 25—40க்கும் உட்பட்டவர்கள். பிணைப்பணம் ரூ. 250. அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 26-2-62 பி. ப. 4-00 மணிக்கு முன்பாக மனுச்செய்யவும். நீ. யேம்ஸ், தலைவர், பண்டத்தரிப்பு கோவில் பற்று, ப. நோ. கூ. ச. சமாசம், பண்டத்தரிப்பு.

## தேவை

முரசு மோட்டை பல நோக்கு ஐக்கிய சங்கம் பரந்தன்

மேற்படி சங்கப் பண்டகசாலைக்கு ஓர் களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. கீழ்க் காணும் தகைமைகளையுடையவர்கள் தமது விண்ணப்பத்தை கௌரவ காரியதரிசி, முரசுமோட்டை ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற விலாசத்திற்கு 26-2-62 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல், பதிவுத் தபால் மூலமோ, அன்றி நேரிலோ சேரச் செய்தல் வேண்டும்.

**தகைமைகள்**

1. தமிழ் அல்லது ஆங்கில கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். 2. வயது 25 தொடக்கம் 40 வரை. 3. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். 4. நன்நடத்தையுள்ளவராய் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றுச் சித்தியடைந்தோருக்கும், வியாபார அனுபவம் உடையவருக்கும், கரைச்சிப் பகுதியைத் தாயகமாகக் கொண்டோருக்கும் விசேட சலுகை காண்பிக்கப்படும்.

**பிணை:** தெரிவு செய்யப்பட்டோர், தெரிவு செய்யப்பட்டவுடன் ரூ. 1000 ரொக்கப் பிணையாகவும், ரூ. 2000 ஆதனப்பிணையாகவும் சங்கத்திற்குச் செலுத்த வேண்டும்

**சம்பளம்:** சகலதும் உட்படாத மொன்றிற்கு ரூ. 100 சம்பளமாக வழங்கப்படும். தகுதிக்கேற்ப சம்பள உயர்வும் உண்டு.

விண்ணப்பத்துடன், தேவைப்பட்ட தராதரப் பத்திரங்களினதும், சமீபத்தில் பெற்ற இரு குண நலச் சான்றுப் பத்திரங்களினதும், பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் தமது கையெழுத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

க. இராசகோபால்
கௌரவ காரியதரிசி
முரசுமோட்டை
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.


## வேது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும் உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்
நடித்த
# பாச மலர்
திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன் பத்மினி
நடித்த
மீண்ட சொர்க்கம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962 20-ம் ஆண்டு, பெப்ரவரிமாதம் -ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.